விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 02 வியாழக்கிழமை (18.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211

முல்லை நீராவியடிப் பிள்ளையார் ஆலய

நந்திக் கொடிகள் பிக்குவால் அறுத்தெறிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து அடாத்தாக விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்குவால் நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்த நந்திக் கொடிகள் அறுத்து எறியப்பட்டுள்ளன.

கடந்த (06.07.2019) அன்று நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் 108 பானைகளில்பிரம்மாண்ட பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது. இந்த பொங்கல் நிகழ்வின்போது ஆலய சூழலை அலங்கரிப் பதற்காக ஆங்காங்கே வீதியின் ஓரமாக வீதியின் மேலாகவும் நந்தி கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக் கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த நந்திக் கொடிகள் அறுத்து 23

5 ரூபாயால்

பாணின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

450 கிராம் எடையுள்ள பாண் ஒன்றின் விலை 5 ரூபாயால் அதி கரிக்கப்படுவதாக அகில இலங்கை பேக்கரி உரி 23

மரண தண்டனைக்கு

அமைச்சரவை மீளவும் ஒப்புதல்

(கொழும்பு)

மீளவும் மரண தண்டனையை நிறைவேற்றும் ஜனாதிபதியின் முடிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். 23

பிணை வழங்கக் கோரி

5ஆவது நாளாக தமிழ் அரசியல் கைதி உணவு ஒறுப்பு

(கொழும்பு)

தனது வழக்குக்கான ஆதாரங் களை திரட்டுவதற்கு தனக்கு பிணை வழங்கக் கோரி 23

தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது

ரணிலின் கருத்திலிருந்து தெளிவாகின்றது – சித்தார்த்தன்

(குருமன்காடு)

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழர்களுக்கு தீர்வுக் கிடைக்காது என்பது பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் கருத்தின் ஊடாக தெளி வாக விளங்கிவிட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரி 23

5ஜி ஸ்மாட் கோபுரங்கள்

அமைப்பதை உடனடியாக நிறுத்துங்கள்

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மனித குலத்துக்கும் சுற்றாட லுக்கும் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து முழுமையாக மதிப்பீடுகள் பெறப்படும் வரை 5ஜி ஸ்மாட் கோபுரங்கள் அமைக்கும் பணி களைப் பிற்போட வேண்டும் என முன்னாள் வட மாகாண முதல மைச்சரும் தமிழ் மக்கள் கூட்ட ணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி. விக் னேஸ்வரன் கேட்டுக் 23

கி.பி 13ம் நூற்றாண்டுக்குரிய இந்து ஆலயம் மன்னார் குருந்தன் பகுதியில் கண்டுபிடிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் குருந் தன் குளப்பகுதியில் நேற்று முன் தினம் யாழ்ப்பாண பல்கலைக் கழக வரலாற்றுத்துறை இணைப் பாளர் தொல்லியல்துறை பேராசிரி யர் பரமு புஷ்பரட்ணம் தலைமை யில் உதவி விரிவுரையாளர், மாணவர்கள் மேற்கொண்ட கள ஆய்வில் கி.பி.13ம் நூற் றாண்டுக்குரிய அழிபாடு 23

கன்னியா விவகாரம்

அனைத்து தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

கன்னியா உள்ளிட்ட அவசர விவகாரங்களை ஆராய இன்று காலை அனைத்து தமிழ் எம்.பிக் களிற்கும், ஜனாதிபதிக்கு மிடையிலான சந்திப்பு 23

தமிழர் பிரச்சினை அறிந்தவரே

ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் – மகிந்த

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்து தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய வேட்பாளர் 23

3 ஆண்டுகளில் அரசியல் தீர்வு காலத்தை கடத்தும் கதையே

மாவை எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு ஆண்டுகால அவ காசத்தில் அரசியல் தீர்வை பெற் றுத் தருவோம் என்பது காலத்தை கடத்தும் கதையாகவே தெரிகின் றது.

வாக்குறுதிக்கு அமைய இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக் களுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என இலங்கை தமிழ ரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பின 23

ஐ.தே.கவில் இணையும்

சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஜக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க மற்றும மொகான் லால் கிரேரோ ஆகியோர் விரை வில் ஜக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக 04

இந்து தெய்வ சன்னதியில் பௌத்த கொடி ஏற்றிய பிக்கு

மக்கள் போராட்டத்தால் கொடியை அகற்றிய பொலிஸார் 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

இ.போ.ச ஊழியர்களுக்கு

பதவி – சம்பள உயர்வுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை

(கொழும்பு)

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியின்றி, இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு பதவி - சம்பள உயர்வு மேற்கொள்ளவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை சுதந்திர தேசிய சேவை சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான வழக்கு விசாரணை, நேற்று புதன்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரியந்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ, விஜித் மலல்கொட ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாத்தால் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடையுத்தரவு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படுமென்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம-3)

கன்னியா வெந்நீரூற்றில் விகாரை கட்டுமாறு

தொல்பொருள் திணைக்களத்துக்கு கடிதம் எழுத செயலாளருக்கு பணிக்கவில்லை

ஜனாதிபதி தெரிவித்ததாக மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்று பகுதியில் விகாரை கட்டுமாறு தொல்பொருள் திணைக்களத்துக்கு கடிதம் எழுதும் படி தனது இணைப்புச் செயலாளருக்குத் தான் கூறவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை அவர் தன்னிடம் கூறியதாக அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். அப்படி கடிதம் எழுதப்பட்டிருந்தால் இதுபற்றி விசாரிப்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசனிடம் கேட்டபோதே

அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் தூதுக் குழுவை சந்திக்க என்னிடம் அவர் உடன்பட்டார்.

ஜனாதிபதியுடனான உரையாடலையடுத்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை, எந்தவித விகாரை கட்டுமானப் பணிக்கும் கன்னியாவில் இடம்கொடுக்க வேண்டாம் என திருகோணமலை மாவட்ட செயலாளர்புஸ்பகுமாரவை அழைத்தான் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 77 அரச ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 77 அரச ஊழியர்களுக்கு நேற்று நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 77 அரச ஊழியர்களுக்கான நிரந்த நியமனம் வட மாகாண ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டது. வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் இணைந்து நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர். இதன்போது, கலாசார உத்தியோகத்தர்கள் 4 பேருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 73 பேருக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, வட மாகாண ஆளுனரின் மக்கள் சந்திப்பும் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. (ம-3)

அமரிக்கா - சீனா முரண்பாட்டுக்காக இலங்கையை பலியாக்க முடியாது

வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க - சீன முரண்பாடுகளுக்கு நாட்டை பலியாக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அமெரிக்கா ஆசிய நாடுகளில் நிரந்தர ஆதிக்கம் செலுத்தும் திட்டங்களை தற்போது வகுக்கின்றது.

சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் பாரிய பொருளாதார போட்டித் தன்மை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் எமது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒப்பந்தங்களை அமெரிக்காவுடன் அரசாங்கம் செய்துகொள்வது எதிர் காலத்தில் நாட்டை பாரிய நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையிலான அதிகார போட்டியே கடந்த நான்கு வருட காலமாக அரசாங்கம் பலவீனமடைவதற்கு பிரதான காரணம் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

ஜனாதிபதித் தேர்தலில்

ஜே.வி.பி தலைமையில் பொது வேட்பாளர்

நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான இடதுசாரி கூட்டணி சார்பாக ஒரு பொது வேட்பாளர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படுவார் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வேட்பாளரை அறிவிக்க முதலில் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டும். ஒரு பொதுவான வேட்பாளர் தொடர்பாக பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிதைத்துள்ளார்.

எனவே இடதுசாரி குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும், ஜனநாயகத்தை ஆதரிக்கும் மற்றும் அதன் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முற்போக்கான வேட்பாளரையே ஜே.வி.பி. களமிறக்கும்.

கடந்த 71 ஆண்டுகளில், இலங்கை சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன புதிய மற்றும் பழைய தலைவர்களுடன் ஆட்சிக்கு வந்த பிற கட்சிகள் இரண்டினாலும் நாட்டை மேம்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும், இந்த இலக்கை ஜே.வி.பி.யினால் உடைத்தெறிய முடியும் என கூறினார். (ம-3)

அரசியல் வாதிகளின் பெயர்களை அரச நிறுவனங்களுக்கு வைப்பதற்கு தடை

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

உயிருடன் இருக்கும் அரசியல் வாதிகளின் பெயர்களில் அரச நிறுவனங்களை பெயரிடும் நடவடிக்கை எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படாதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த தேசப்பிரிய மேலும் கூறியுள்ளதாவது, பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அரசியல் வாதிகளின் பெயர்களை வைப்பது சிறந்த விடயமல்ல.

ஆகையால் இவ்விடயம் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அண்மையில் அறிவித்திருந்தோம்.

இதன்போது, 75 சதவீதமான அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன என மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 04.11.1957 இறப்பு 15.07.2019

எமது சங்கத்தின் அங்கத்தவரும் மருத்துவ உத்தியோகத்தர் பண்டத்தரிப்பு கிராமிய சித்த மருத்துவமனை DR **உதயகௌரி** அவர்களின் அன்புத் தந்தை **சிவ சிதம்பரஜயர் துரைசாமி ஜயர்** அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை

(9625)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் **திரு.து.நவரட்ணஜோதி** அவர்களின் மாமியார் **திருமதி அம்பலவாணர் பராசக்தி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம் யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

(9621)

கடை விற்பனைக்கு

முல்லைத்தீவு நகரின் மத்தியில் 03 மாடிகொண்ட 3300 சதுர அடியுடைய நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடம் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :

077 287 0223

(C-6936)

தொல்பொருள் திணைக்களத்துக்குரிய காணிகளில்

பௌத்த விகாரைகள் அமைக்க முடியுமாயின் இந்துக்கோயில்கள் ஏன் அமைக்க முடியாது?

யோகேஸ்வரன் எம்.பி.கேள்வி

(மட்டக்களப்பு)

இலங்கையில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப் படுகின்ற நிலையில் ஏன்? இந்துக் கோயில்கள் அமைக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலைக்கன்னியா நீரூற்றில் பௌத்த காடையர்கள் ஒரு பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட அசம்பாவிதம் தொடர்பாக வலம்புரிப் பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பௌர்ணமி நாளில் இந்து மக்கள் திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயத்தை தரிசிக்க வருவார்கள் எனத் தெரிந்தும் ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறார்கள் எனத் தெரிவித்து முன்கூட்டியே பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்ற பொலிஸார் எவ்வாறு பௌத்த பிக்குகளையும் காடையர் குழுவையும் ஆலயப் பகுதிக்குள் உள்நுழைய விட்டார்கள் எனக்கேள்வி எழுப்பினார்.

இந்து மக்கள் ஆலயத்தை தரிசிக்க வரும்போது ஆர்ப்பாட்டம் எனக்கூறி தடை உத்தரவு பெறும் பொலிஸார் ஒரு மதத்தை புறந்தள்ளி மற்றைய மதத்தை ஆதரிப்பது இன, மத முறுகல்களை ஏற்படுத்தும் செயற்பாடாகும்.

கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் தொடர்பாக அமைச்சர் மனோ கணேசனின் தலைமையில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கன்னியா பரம்பரை ஆதீன குரு அகத்திய அடிகள், பிள்ளையார் கோயில் காணி உரிமையாளர் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் நானும் கலந்து கொண்டேன்.

இக்கூட்டத்தில் குறித்த பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்ட இடத்தில் தான் மீண்டும் பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட வேண்டும். தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான காணி எனக் கூறி பௌத்த மத வாதத்தை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது எனத் தெளிவாகத் தெரிவித்தோம்.

இந்து மக்களின் பாரம்பரியப் புராதன சின்னமாக விளங்குகின்ற கன்னியா வெந்நீரூற்றும் அதனுடன் தொடர்புபட்ட பிள்ளையார் ஆலயமும் அக்காலத்திலும் இந்துக்களுக்கே சொந்தமானது.

நாட்டில் ஒரு சில சிங்கள பௌத்த பேரின்வாத சக்திகளின் தூண்டுதலின் பேரில் இடம்பெற்று வரும் இத்தகைய மத நல்லிணக்கத்தைக் குழப்பும் செயற்பாட்டிற்கு எதிராகத் தொடர்ந்தும் போராடுவோம் என மேலும் தெரிவித்தார். (9-10)

மரணதண்டனை மனுவின் தீர்ப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நால்வருக்கு எதிராக மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள தீர்மானத்தை ரத்துச் செய்யுமாறு, ஊடகவியலாளர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு குறித்த அடிப்படை விடயங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் யசன்ன கோதாகொட (தலைவர்) தலைமையிலான ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதியரசர் குழாமால் இந்த மனுவை விசாரிப்பதற்கு அனுமதி வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் நேற்று தீர்மானிக்கப்படவிருந்தது.

எனினும்மரண தண்டனையை அமுல்படுத்துவதை தடுக்குமாறு, மேல் நீதிமன்றத்தால் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி வரை தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், தமது தீர்ப்பை அறிவிக்காமலிருக்க ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஊடகவியலாளர் தாக்கல் செய்த மனுவை ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (7-9)

மொட்டின் தலைவராக மகிந்த; ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி மாநாட்டில் இந்த நியமனங்கள் தெளிவாக அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (7-9)

அமெரிக்க - சீன முரண்பாடுகளுக்கு நாட்டைப்பலியாக்க முடியாது

(கொழும்பு)

அமெரிக்க - சீன முரண்பாடுகளுக்கு நாட்டை பலியாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அமெரிக்கா ஆசிய நாடுகளில் நிரந்தர ஆதிக்கம் செலுத்தும் திட்டங்களை தற்போது வகுக்கின்றது.

சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் பாரிய பொருளாதார போட்டித் தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் எமது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒப்பந்தங்களை அமெரிக்காவுடன் அரசாங்கம் செய்து கொள்வது எதிர்காலத்தில் நாட்டை பாரிய நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையிலான அதிகார போட்டியே கடந்த நான்கு வருட காலமாக அரசாங்கம் பலவீனமடைவதற்கு பிரதான காரணம் என்பதும் மேலும் தெரிவித்தார். (7-9)

பிரதமரின் வாக்குறுதியை நம்பி தமிழ் மக்கள் ஏமாறவேண்டாம்

தயாசிறி ஜெயசேகர

(கொழும்பு)

தேர்தல்கள் நெருங்குவதால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக இரண்டு வருடங்களில் அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று மீண்டும் அந்த மக்களின் பொய் வாக்குறுதியையே வழங்கியுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வாக்குறுதிகளுக்கு ஏமாறாமல் தமிழ் மக்கள் விழிப்புணர்வுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (7-9)

வழிகாட்டுவாரா... வழிவிடுவாரா தவிக்கும் 'தல' தோனி

இந்திய அணியின் 'சீனியர்' தோனி இக்கட்டான நிலையில் உள்ளார். இளம் வீரர்களுக்கு வழிவிட்டு ஓய்வு பெறுவாரா அல்லது வழிகாட்டியாக அணியில் நீடிப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய அணியின் வெற்றிக்கேப்டனாக வலம் வந்தவர் தோனி, 38. இரண்டு உலக கோப்பையை (2007- 'ரி20', 2011- ஒரு நாள்) வென்று காட்டினார். இவரின் 'பினிஷிங்' திறன், 'கூலாக' செயல்படுவது ரசிகர்களிடம் பாராட்டை பெற்றது. திடீரென 2014ல் டெஸ்டி லிருந்து விடை பெற்றார்.

கடந்த 2015ல் அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த உலக கிண்ணத் தொடரில் (8 போட்டி, 237 ஓட்.,) ஜொலிக்கவில்லை. பின், சொந்த மண்ணில் நடந்த 'ரி20' உலக கிண்ணத் தொடரில் இவரது தலைமை யிலான இந்திய அணி அரையிறுதியில் வீழ்ந்தது. சமீபத்திய உலக கிண்ணத் தொடரில் இந்திய அணி, அரையிறுதியுடன் திரும்பியது. தோனியும் (9 போட்டி, 273 ஓட்.,) சோபிக்காத காரணத்தால், மீண்டும் ஓய்வு குறித்து பேச்சு எழுந்துவிட்டது.

சென்னை ஐ.பி.எல்., அணிக்கு மூன்று கிண்ணம் வென்று கொடுத்தாலும், இந்திய அணிக்கு ஏமாற்றுகிறார தோனி. சென்னை அணிக்காக 166 இன்னிங்சில் 4307 ஓட்டங்கள் (22 அரை சதம்) குவித்துள்ளார். சராசரி 42.22 ஆக உள்ளது. இந்திய அணிக்கு 85 இன்னிங்சில் 1617 (2 அரை சதம்), ஓட்டங்கள்தான் எடுத்துள்ளார். சராசரியும் 37.6 மட்டும்தான்.

மோசமான செயற்பாடு

ஒரு நாள் போட்டியிலும் தடுமாற்றம் தெரிகிறது. 2016ல் 10 இன்னிங்சில் 278 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். 2018ல் (13 இன்னிங்ஸ், 275 ஓட்.,) இன்னும் சறுக்கினார். ஒரு நாள் அரங்கில் இவரது 'ஸ்டிரைக் ரேட்' 2016ல் 80.11 ஆக இருந்தது. 2017ல் 84.73 ஆக மாறியது. அடுத்த ஆண்டில் 71.42 ஆக குறைந்தது. கடந்த 2017க்குப்பின் ஒரு நாள் அரங்கில் இவர் சந்தித்த மொத்த பந்துகளில் 50.78 சதவீதம் 'டொட் போலாக' (ரன் எடுக்கவில்லை) உள்ளது. 2017க்குப் பின் கடைசி கட்ட ஓவர்களில், தோனி பவுண்டரி அடிக்கும் சதவீதம் 48.23 மட்டுமே. துடுப்பாட்டம், விக்கெட் காப்புத் திறன் குறைந்து வருவதால் தோனி விரை வில் ஓய்வு பெறுவது நல்லது என்று கூறப்படுகிறது.

அடுத்த மாதம் மே.தீவுகள் மண்ணில் ஆரம்பமாகவுள்ள 3 'ரி20', 3 ஒரு நாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தோனிக்கு வாய்ப்பு கிடைப்பது கடினம். இவ ரது இடத்திற்கு இளம் விக்கெட் காப் பாளர் ரிஷாப்பை களமிறக்க முடிவு செய்துள்ளனர். கரீபியன் தொடருக்கான அணியில் இடம் பெறாவிட்டாலும், ஹோலிக்கு வழிகாட்டியது போல ரிஷாப் பிற்கும் உறுதுணையாக இருக்கும் எண்ணத்தில் உள்ளார்.

வாய்ப்பு 'நோ'

பி.சி.சி.ஐ., அதிகாரி ஒரு வர் கூறுகையில்," சொந்த மண் அல்லது அந்நிய மண் எது வானாலும், முதல் கீப்பராக தோனி செல்வதற்கு வாய் ப்பு இல்லை. இவ ருக் குப்பதில் ரிஷ பாப் அணியில் இடம் பிடிப்பார். ஒரு வேளை, மே.தீவு கள் தொடருக்கான 15 பேர் கொண்ட அணியில் இடம்பிடித் தாலும், 'லெவன்' அணியில் வாய்ப்பு கிடைக்காது. ரிஷாப்பிற்கு தற்போது 22 வயதாகிறது. அடுத்த ஆண்டு அவுஸ் திரேலியாவில் நடக்கவுள்ள 'ரி20' உலக கிண்ணத் தொடருக்கு (அக்.18, நவ. 15) இன்னும் ஒரு ஆண்டு இடைவெளி உள்ளது. இந்த காலகட்டத்தில் ரிஷாப் 'செட்' ஆகி விடுவார்." என்றார்.

எம்.எஸ்.தோனி

டெஸ்ட் அணியில் ரோய்

அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்கேற்க வுள்ள இங்கிலாந்து அணியில் ஜேசன் ரோய் இடம் பிடித்துள் ளார்.

இங்கிலாந்து, அயர்லாந்து அணிகள் மோதும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி, லண்ட னில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் வரும் 24-27ல் நடக்கவுள்ளது. இப்போட்டிக் கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட் டது.

இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜேசன் ரோய், அறிமுக வாய்ப்பு பெற்றுள்ளார். சமீபத் தில் முடிந்த உலக கிண்ணத் தொடரில் 443 ஓட்டங்கள் குவித்த இவர், இங்கிலாந்து அணி முதன்முறையாக சம்பி யன் பட்டம் வெல்ல முக்கிய பங்குவகித்தார்.

தவிர இவர், இப்போட்டியில் சிறப்பாக செயல்படும் பட்சத் தில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருக் கும் தேர்வு செய்யப்படலாம்.

இடுப்பு பகுதியில் ஏற்பட் டுள்ள காயத்தால் மார்க் உட், ஜோப்ரா ஆர்ச்சர் தேர்வு செய் யப் படவில்லை. உலக கிண் ணம் வென்ற இங்கிலாந்து அணியில் இடம் பெற்றிருந்த ஜோ ரூட், ஜொஸ் பட்லர், பென் ஸ்ரோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், ஜானி பேர்ஸ்டோவ், மொயீன் அலி ஆகியோர் டெஸ்ட் போட்டி க்கு தேர்வாகினர்.

அணி விபரம்: ஜோ ரூட் (அணித் தலை வர்), மொயீன் அலி, ஜிம்மி அண்டர்சன், ஜொனி பேர்ஸ்டோவ், ஸ்ருவேர்ட் பிரோட், ரோரி பேர்ன்ஸ், சாம் கர்ரான், ஜோ டென்லி, லீவிஸ் கிரிகோரி, ஜாக் லீச், ஜேசன் ரோய், ஆலி ஸ்டோன், கிறிஸ் வோக்ஸ்.

இன்சமாம் விலகல்

பாகிஸ்தான் அணியின் தேர்வுக் குழு தலைவர் பதவியில் இருந்து முன்னாள் அணித் தலைவர் இன்சமாம் விலகினார்.

பாகிஸ்தான் கிரிக் கெட் சபையின் (பி.சி. பி.,) தேர்வுக் குழு தலைவராக முன் னாள் அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் (வயது - 49) உள்ளார். இவ ரது பதவிக் காலம் வரும் 31ல் முடிவடைகிறது.

இந்நிலையில் இவர், தனது ஒப்பந்தத்தை நீட்டிப்பார் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இவர் விலகுவதாக தெரிவித்துள்ளார். சமீபத் தில் இங்கிலாந்தில் நடந்த உலக கிண்ணத் தொடரில் பாகிஸ் தான் அணி, லீக் சுற்றோடு திரும்பியது.

இதுகுறித்து இன்சமாம் கூறுகையில், "மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தேர்வுக் குழு தலைவர் பதவியில் இருந்து வருகி றேன். மேலும் எனது ஒப்பந்தத்தை நீட்டிக்க விருப்பம் இல்லை. இதுகுறித்து பி.சி.பி., தலைவர் மற்றும் இயக்குநரிடம் எனது முடிவை தெரிவித்துவிட்டேன்.

அடுத்து நடக்கவுள்ள டெஸ்ட் சம்பியன்ஷிப், 'ரி20' உலக கிண்ணம் (2020) மற்றும் உலக கிண்ணம் (2023) தொடர்களுக்கு முன், புதிய தேர்வுக்குழு தலைவரை தேர்வு செய்யும் பட்சத்தில், சிறந்த அணியை உருவாக்கலாம்," என்றார்.

இந்து தெய்வ...

நுவரெலியா, கந்தப்பளை தோட்ட பகுதியில் உள்ள காவல் தெய்வ சன்னதியில் பிக்கு ஒருவரால் பௌத்த கொடி ஏற்றப்பட்ட மையால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. பிக்குவின் இந்தச் செயலைக் கண்டித்து பிரதேச மக்கள் நேற்று புதன்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கந்தப்பளை தோட்டப் பகுதியில் உள்ள மாடசாமி காவல் தெய்வ சன்னதியில் பொல நறுவை பகுதியை சேர்ந்த பிக்கு ஒரு வரி னால் இந்த பௌத்த கொடி ஏற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தோட்ட மக்களால் கந்தப் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. நுவரெலியா பொலிஸ் வலய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், நுவரெலியா பிரதேச சபைத் தவிசாளர் வேலு யோகராஜ் ஆகியோர் சென்று மக்களுடன் பேச்சு நடத்தினர்.

அதன் பின்னர் பௌத்தக் கொடி பொலி ஸாரால் அகற்றப்பட்டது. (ம-3)

3 ஆண்டுகளில்...

இதன்போது எமது மக்களின் அரசியல் நிலைப்பாடுகள், அரசியல் தீர்வு விடயங்கள் மற்றும் வடக்கின் அபிவிருத்திசெயற்பாடுகள் குறித்து பிரதமருக்கு தெளிவுபடுத்தினேன் என அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

சுதந்திரக் கட்சி...

இதன் காரணமாகவே கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங் கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரே ரணை தொடர்பான வாக்கெடுப்பில் இவர்கள் இருவரும் கலந்து கொள்ளவில்லை.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேணைக்கு ஆதரவாக வாக் களிப்பது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கொள்கை ரீதியான தீர்மான த்தை எடுத்திருந்த நிலையில், இவர்கள் இருவரும் அந்த தீர்மானத்திற்கு கட்டுப்படாது செயற்பட்டுள்ளனர்.

மகிந்த சமரசிங்க, கடந்த காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மிகவும் நெருக்கமான மற்றும் நம்பிக்கை யானவராக செயற்பட்டு வந்ததுடன் தற்போது ஜனாதிபதியிடம் இருந்து தூர விலகி செய ற்பட்டு வருகின்றார்.

சமரசிங்க மற்றும் மொஹான்லால் ஆகி யோர், ஐக்கிய தேசியக் கட்சியிலேயே தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித் விஜயமுனி சொய்சா, பியசேன கமகே, பௌசி, லக்ஷ்மன் செனவிரத்ன, இந்திக பண்டார நாயக்க, மனுஷ நாணயக்கார ஆகியோர் ஏற் கெனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதர வளித்து வருகின்றனர். (ம-3)

நீர்கொழும்பு நகர சபையின் எதிர்க்கட்சித்தலைவருக்கு மறியல் நீடிப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரொய்ஸ் பெர்னாண்டோவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ரொய்ஸ் பெர்னாண்டோ முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, அவரை எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு நீர்கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து, நபர் ஒருவரைத் தாக்கி கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அவர் கடந்த 7 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பாக இதுவரையில் 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

தபால் ஊழியர்களின் பிரச்சினைக்கு ஓரிரு தினங்களில் தீர்வு பெற்றுத் தரப்படும்

ஹலீம் உறுதி

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பிரச்சினைக்கு ஓரிரு தினங்களில் தீர்வு பெற்றுத் தரப்படுமென தபால் சேவைகள், முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் உறுதியளித்துள்ளார்.

தபால் ஊழியர்கள் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் குதித்துள்ள நிலையில் அது தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமிடம் தொடர்பு கொண்டு வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தபால் திணைக்கள ஊழியர்களின் சில பிரச்சினைகள் தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் தீர்வு காண சுற்று நிருபத்தில் சில திருத்தங்களை கொண்டு வர வேண்டியுள்ளது. அதனை ஓரிரு தினங்களில் சீரமைத்துத் தருவதாக உறுதியளித்திருக்கின்றோம்.

பெரும்பாலான தொழிற்சங்கங்கள் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துவதாக தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட ஓரிரு சங்கங்களின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈபடுகின்றனர். அதன் மூலம் தபால் சேவைகள் பாதிக்கப்படப் போவதில்லை. வழமையான சேவையை வழங்க முடியும் என நம்புகின்றேன்.

எவ்வாறெனினும் அடுத்த ஓரிரு தினங்களில் இப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

இது தொடர்பில் தொழிற்சங்கங்களிடம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (ஜ)

மக்கள் கண்டுகளித்த இறுதி சந்திரகிரகணம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இறுதி சந்திர கிரகணத்தை இலங்கை மக்கள் கண்டுகளித்தனர்.

பகுதியளவிலான இந்த சந்திர கிரகணத்தை காண்பதற்கான வாய்ப்பு இலங்கை மக்களுக்கு கிட்டியது.

இந்த சந்திர கிரகணம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.13 இற்கு ஆரம்பமாகியதுடன் நேற்று புதன்கிழமை அதிகாலை 5.47 வரை காணப்பட்டது.

இது இந்த வருடத்திற்கான இறுதிச் சந்திர கிரகணம் என்பதுடன், 2021 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதியே இலங்கையர்களுக்கு அடுத்த சந்திர கிரகணம் தென்படும் என கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போவது மகிந்த தரப்பினரே

ஜோதிடர் கணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினரே வெற்றி பெறுவர் என பிரபல ஜோதிடர் பாலாஜிஹாசன் கணித்து கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தமிழக ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ சார்பான வேட்பாளரே வெற்றிபெறுவார். அத்துடன், அடுத்து இடம்பெறும் நாடாளுமன்ற தேர்தலில் அவர் சார்பான கட்சி வேட்பாளரே பிரதமராக தெரிவு செய்யப்படுவார். இதேவேளை, எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் சமகால ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் நிச்சயம் தோல்வியை சந்திப்பார் எனவும், ஜோதிடர் பாலாஜிஹாசன் கணித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)



பாதுகாப்பு பெட்டகம்

நம்பிக்கை ! பாதுகாப்பு !

இன்றே உங்களுக்கானதோர் பாதுகாப்பு பெட்டகத்தினை பெற்றிட எமது வாடிக்கையாளர் நிலையங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்...

யாழ் மெட்ரோ	: 021 2030 300
வவுனியா	: 024 2223 785
சுண்ணாகம்	: 021 2240 305
சாவகச்சேரி	: 021 4920 300
சங்கானை	: 021 2250 065
மானிப்பாய்	: 021 2255 142
நெல்லியடி	: 021 2264 149
பருத்தித்துறை	: 021 2264 933

HNB

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

பிச் ரேட்டிங் AA-(lka)
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி.
Hatton National Bank PLC - PQ 82

வட இலங்கை சமாதான நீதவான் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ்.மாவட்ட சமாதான நீதவான் சங்கத் தலைவராக லயன் பெ.திருச்செல்வன், பொருளாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜானகி தர்மஜீலன், செயலாளராக அ.ஜெயக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

அகதிகள் விடயத்தில் அவுஸ்திரேலியா கனடாவின் கொள்கைகளைப் பின்பற்றலாம்

அவுஸ்திரேலியத் தூதுவரிடம் ஆளுநர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று மாலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் வடமாகாணத்தின் நீர்ப்பிரச்சினை, அதனை தீர்ப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள "வடமராட்சி களப்பு" திட்டம் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் குறித்தும் விரிவாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு உள்நுழைய முயற்சிப்பது குறித்து கருத்துத் தெரிவித்த உயர்ஸ்தானிகர் சட்டவிரோத குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதன்போது, சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்று குறிப்பிட்ட ஆளுநர் அகதிகள் விடயத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கமானது கனடா போன்று மனிதாபிமான ரீதியில் உள்ளீர்ப்பது தொடர்பில் கொள்கையொன்றினை உருவாக்குவதன் ஊடாக சர்வதேச ரீதியில் தனக்கான இடத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக உதவி செய்வதற்கு தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டதுடன் ஏற்கனவே பயிற்சி வழங்கல் உள்ளிட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை வடமாகாணத்தில் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் தாம் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் மேலும் குறிப்பிட்டார். (5)

முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் குமரகுரு பரன் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மைதானத்தில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத்தலைவி திருமதி. லோ.சிவனொளி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், கௌரவ விருந்தினர்களாக மேகன்ரைல் பாது காப்பு சேவை முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் வி.சுகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

3 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்.

N.K.முருகையா

அளவெட்டிப் பதியில் ஆன்றோனாக வாழ்ந்து வையம் போற்றும் வைத்தியசாலை பணிபுரிந்து விண்ணுலகத் தெய்வத்திடம் சென்றடைந்த மூன்றாம் ஆண்டு நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்திக்கிறோம்.

கரவெட்டி. உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஏழாலை மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் பாட சாலை பிரதான மண்டபத்தில் அதிபர் த.உதயமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (5-105)

தவணைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலை யமும் வடமாகாண கல்வித் திணைக் களமும் இணைந்து நடத்தும் க.பொ.த. உயர்தர 2020 ஆம் ஆண்டு பிரிவு மாண வர்களுக்கான 2 ஆம் தவணைப் பரீட்சை இன்று 18 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர் வரும் 29 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. (5-105)

வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் (நாச்சிமார் கோவில்) வருடாந்த மஹோற்சவம் நாளை மறு தினம் 20 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.50 மணி யளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். எதிர்வ ரும் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிய ளவில் இராதோற்சவமும் மறுநாள் சனிக் கிழமை முற்பகல் 10.30 தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (5)

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்

18.07.2019
ஆடி 02, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துதியை முழுவதும்
திருவோணம் பின்னிரவு 1.56 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை

வளவன்

மீனம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

மேடம்

புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, போசன சுகமுண்டு.

இடபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் விருத்தியுண்டு.

மிதுனம்

எந்தக் காரியத்தையும் நிதானத்துடன் செய்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

கும்பம்

மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களால் பிலபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

மகரம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

தனுசு

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

துலாம்

கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வாகன சுகமுண்டு, செல்வாக்கு அதிகரிக்கும் நாள், போசன நன்மையுண்டு.

கன்னி

மன நிறைவுகூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிறர் உதவியுண்டு.

கடகம்

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.

சிம்மம்

தொழில் சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப் பீர்கள், எதிர்ப்பாக இருந்த வர்கள் மனம் மாறுவர், உடல் நலன் சீராகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

		ராகு, புத, சுக்	
	இராசி பலன்	சூரி, செவ்	
சந்			
சனி, கேது	குரு		

திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

குடமியன் அ.த.க. பாடசாலையில் வரணி ஒன்றியம் (UK) ஒழுங்கமைப்பில் ரட்ணம் பவுண்டேஷன் (UK) அமைப்பினரால் அன்பளிப்பு செய்யப்பட்ட திறன் வகுப்பறைத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராக வரணி ஒன்றியத்தின் (UK) உதவி பொருளாளர் ந. அமலன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

அமெரிக்க இராஜாங்க திணைக்கள மாநாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அனுதாபம்

(வோஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் மத சுதந்திரம் பற்றியதான அமெரிக்க இராஜாங்க திணைக்கள மாநாட்டில் இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் கவலை வெளியிடப்பட்டது.

இம் மாநாட்டை அமெரிக்க இராஜாங்க திணைக்கள செயலாளர் மைக் போம்பியோ ஆரம்பித்து வைத்தார்.

இம் மாநாட்டில் 100 நாடுகளைச் சேர்ந்த 1000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இம் மாநாட்டின் ஆரம்ப தினமான நேற்று முன்தினம் இலங்கையின் தேசிய கிறிஸ்தவ இவான்ஜெலிக்கல் கூட்டமைப்பின் சட்ட மற்றும் வழக்காடல் தலைவி யாமினி ரவீந்திரன் உரையாற்றினார்.

இவர் இலங்கையில் இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதன் பின்னரான நிகழ்வுகள் பற்றிய தகவல்களை ஆழ்ந்த அனுதாபத்துடன் பகிர்ந்து கொண்டார். (7)

தாயகம் சிறப்பிதழ் வெளியீடும் கலை நிகழ்வுகளும்

(ஹற்றன்)

ஹற்றனில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தாயகம் சிறப்பிதழ் வெளியீடும், கலை நிகழ்வுகளும் நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஹற்றன் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தாயகம் சிறப்பிதழுக்கான அறிமுக உரையை அதன் பிரதம ஆசிரியர் க. தணிகாசலம், கருத்துரைகளைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.ஜெயசீலன், பதுளை மீதும்பிட்டிய தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.புவியரசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (5)

நீரின்றி அமையாது உலகு செயற்றிட்டத்தின் கீழ் ஆழ்துளைக் கிணறு அமைத்து கொடுப்பு

(சாவகச்சேரி)

நீரின்றி அமையாது உலகு எனும் செயற்றிட்டத்தின் மூலம் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் விருப்பிற்கு அமைவாக கிணறு இல்லாத குடும்பம் ஒன்றிற்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட தலைவரும், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான பொன்னம்பலம் ஆதவனால் தெல்லிப்பழைஜே/320 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் செல்வராசா தனலட்சுமி குடும்பத்திற்கு ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (ஜ-30)

பழமை வாய்ந்த
ஆதி சக்தி வாய்ந்த
மலையாள மந்திரம்

+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

தொண்டர்கள் தேவை

தற்கொலைகளைத் தடுப்போம்!

உங்கள் நேரத்தில் ஒரு துளியை,
முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச்
செலவிட நீங்கள் தயாரா?

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.

பயிற்சி நெறி மிக விரைவில்.
உடனே அழையுங்கள்.

(9559)

கைகொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS) வீதிக்கு அண்மையில்)

077 900 8776 (மு.ப. 9.00-பி.ப. 1.00)

பதவி வெற்றிடங்கள்

உதவி ஆசிரியர் (ஆண்கள்)
தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
வயது 30க்கு மேல்,
ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை

அலுவலகச் செய்தியாளர்கள் (வெளிக்களம், ஆண்கள்)
தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
வயது 25க்கு மேல்

அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம், பெண்கள்)
தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
வயது 30க்கு மேல்
ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை

குறிப்பு : யாழ்ப்பாணத்தை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் 19.07.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

வலம்புரி
இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
- முகாமையாளர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

அறிமுகவிழாவும் வழிகாட்டல் விரிவுரைகளும்

2017/18 ஆம் கல்வியாண்டுக்கு கலைப்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான அறிமுக விழாவும் வழிகாட்டல் விரிவுரைகளும் 22.07.2019 தொடக்கம் 26.07.2019 வரை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அழைப்பிதழ் மாணவர்களுக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.எனவே குறித்த நாட்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-9000)

தமிழருக்கு தீர்வு குறித்து நம்பிக்கையில்லை; இனி அரசிடம் பணம் பெற்று அபிவிருத்தி செய்வோம்

சிவமோகன் எம்.பி

(நெளுக்குளம்)

ரணில் விக்கிரமசிங்கவின் வார்த்தையில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் மக்களின் வரிப்பணத்தை அரசிடம் இருந்து பெற்று அபிவிருத்தியை நாம் மேற் கொள்வோம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தமிழர்களிற்கான தீர்வானது இன்னும் மூன்று வருடத்தின் பின்னரே கிடைக்கும் என்று கூறியிருந்தார். இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

1948ஆம் ஆண்டில் இருந்து எத்தனையோ அரசியல் தலைவர்கள் இதே வசனத்தை பேசியிருக்கிறார்கள்.

இதேவேளை ரணில்விக்கிரமசிங்க என்ன நோக்கத்தில் அவ்வாறு கூறினார் என்று எனக்கு தெரியாது. என்னைப்பொறுத்த வரையில் தமிழர்களிற்கான தீர்வு கிடைத்திருக்க வேண்டுமாயின் 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தாங்களாகவே தங்களது ஆயுதங்களை மௌனித்த பின் தமிழர்களிற்கான ஒரு தீர்வை நோக்கி சிங்கள தேசம் சென்றிருக்க வேண்டும்.

அதிலிருந்து முற்றுமுழுதாக மகிந்த ராஜபக்ஷ விலகிவிட்டார். அதன் பின்னர் வந்த மைத்திரிபால சிறிசேனவும் தமிழர்களின் வாக்குகளில் ஜனாதிபதி ஆனவர். அவரும் கொடுத்த வாக்கில் இருந்து முற்று முழுதாக விலகி விட்டார்.

எனவே அந்த அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவின் வார்த்தைகள் கூட நம்பிக்கைக்குரியவை அல்ல. எங்களை பொறுத்தவரை பேயா பிசாசா என்ற தீர்மானமே எங்களிடம் இருந்தது.

எனவே ஒரு பிசாசு வரக்கூடாது என்றால் ஒரு பேயை ஆதரிக்க வேண்டிய தேவை இருந்ததால் இந்த அரசை ஆதரித்திருக்கிறோம். எமது தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை அவிழ்த்து விட்டதுடன் எமது மக்களையும் சரணடைந்தவர்களையும் படு கொலை செய்தனர்.

இதற்கு காரணமாக இருந்தவர்கள் ஜனாதிபதியாக வரக்கூடாது என்பதற்காக இன்னும் பல விடயங்களையும் இவ்வாறு செய்வோம்.

நாங்கள் பணத்திற்காக ஆதரிக்கவில்லை. ஊடகங்கள் முன்பு கூறியது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன செய்தது என்று.

இன்று 595 மில்லியனை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எடுத்து செய்த போது என்ன செய்தீர்கள் என்ற கேள்வியை இப்போது நிறுத்தி விட்டு பணத்திற்காக செய்கின்றீர்கள் என கூறுகின்றீர்கள். இது மக்களிற்கான பணம். எமது வரிப்பணம் நாங்கள் எடுப்போம்அதை மக்களிற்காக செலவளிப்போம் என மேலும் தெரிவித்தார். (9-299)

அமுதநதிப் பிரவாகம் சாதனையாளர் விருது

(வவுனியா)

வன்னியூர்க் கவிராயர் கலை யிலக்கியப் பேரவை, இலங்கை பாவலர் சாரதிதாசன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அமுதநதிப் பிரவாகம்" சாதனையாளர் விருது மற்றும் கலை, இலக்கிய நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கதிரேசன் சுவர்ணராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். (9)

முழு நிலா கலைவிழா

(நெளுக்குளம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு கல்வி வலயம் நடத்தும் முழு நிலா கலைவிழா நேற்று சேமமடு சண்முகானந்தா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இதன் போது வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையை சேர்ந்த மாணவ, மாணவிகளின் நடனம், பாடல்கள், நாட்டுக்கூத்து போன்ற பாரம்பரிய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் பிரதம விருந்தினர்களினால் மாணவர்களிற்கான பரிசல்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பிரதேசசபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

ஆடிப்பிறப்பு நிகழ்வுகள்

(நெளுக்குளம்)

ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் வவுனியாவில் தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச்சிலையடியில் நேற்றுக் காலை ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. நகரசபை கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் தர்மலிங்கம் வீதி, முச்சந்திலுள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் நினைவுத்தூபியில் நகர உபபிதா சு.குமார சுவாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னாரின் நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவுப் பேருரையை தமிழ் ருவி சிவகுமாரன் நிகழ்த்தியிருந்தார். ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை பாடலை வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் பாடியிருந்தனர். இந் நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், நகரசபை செயலாளர், தமிழ் மணி அகளங்கன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன், முச்சக்கர வண்டிகள் உரிமையாளர் சங்கத்தலைவர் ரவி, சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பல ரும் கலந்து கொண்டனர். (9-299)

முதியவரை இனங்காண உதவுமாறு கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புகையிரதத்தில் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வரும் 60தொடக்கம் 65 வயது மதிக்கத்தக்க வயோதி பரை இனங்காண உதவிடுமாறு வவுனியா வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வவுனியா ஈரப்பெரியகுளம் புகையிரதக்கடவைப்பகுதியில் படுகாயமடைந்து சுய நினைவு இழந்த நிலையில் காணப்பட்ட 60 தொடக்கம் 65வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் காவு வண்டி மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் குறித்த தகவல்கள் தெரிந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரியுள்ளனர். (9-299)

புளொட் அமைப்பின் 30வது வீரமக்கள் தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. வவுனியா கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள தோழர் க. உமாமகேஸ்வரன் நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் மாலை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 30ஆவது வீரமக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் தமிழ் ஈழ விடுதலைக்கழகத்தின் போராட்டத்தில் இணைந்து உயிர்நீத்தவர்களை கௌரவப்படுத்தும் நோக்கில் அவர்களுடைய உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து உயிர் நீத்தவர்களிற்கான அஞ்சலி உரைகள் இடம் பெற்றன. இந் நிகழ்வில் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், முன்னாள் மாகாணசபை உறுப் பினர்களான பா. கஜதீபன், ஜி.ரி லிங்கநாதன், நகரசபை உறுப்பினர் கள், ஏனைய கட்சிஉறுப்பினர்கள் மற்றும் உயிர்நீத்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். படங்கள்: குருமன்காடு, நெளுக்குளம் செய்தியாளர்கள்)

பிரதேச சபை அமர்வில் குழப்பம்

(மாவனெல்லை)

மாவனெல்லை பிரதேச சபையின் நேற்றைய அமர்வின் போது குழப்பம் ஏற்பட்டுள்ளது.

உறுப்பினர்களில் சிலர், சபையில் இருந்த ஆசனங்கள் மற்றும் ஒழுங்குப்பத்திரத்தை வீசியெறிந்து குழப்பம்விளைவித்துள்ளனர்.

இதன் காரணமாக, பிரதேச சபையின் விசேட அமர்வு 30 நிமிடங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

விசேட அமர்வினை நடத்துமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களால் சபையின் தலைவரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்த விசேட அமர்வு இடம்பெற்றுள்ளது. (ஐ)

ஆட்டோ-வான் விபத்து; மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ-வான் மோது ண்டு விபத்துக்குள்ளானதில் ஆட டோவில் பயணம் செய்த இருவர் உட்பட ஆட்டோச் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருதாவது.

நேற்று பிற்பகல் 2 மணி யளவில் நவாலி களையோடை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கருகாமையில் இவ் விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் ஆட்டோ பலத்த சேதமடைந்ததுடன் படு காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பில் மானிப் பாய் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (10)

தகவல் அறியும் சட்ட விழிப்புணர்வு கருத்தமர்வு

தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறிதலைமையில் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு கருத்தமர்வில் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணியும் தகவல் உரிமைச் சட்ட ஆணைக்குழு அங்கத்தவருமான எஸ்.ஜி.புஞ்சிஹேவா மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே ஆகியோர் தகவல் அறியும் உரிமைகள் சட்டம் தொடர்பான விளக்கத்தை வழங்கினர்.

இக்கருத்தமர்வில் பங்குபற்றியவர்களுக்கு தகவல் உரிமைகள் பற்றிய தகவல் கையேடுகளும் வழங்கப்பட்டன. (5-60)

சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்திப் பூஜை நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை. வசந்த மண்டபப் பூஜை என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி வலம் வருதலும் இடம்பெறும். (5)

பொதுக்கூட்டம்

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

வாகன முகப்பு விளக்கு ஒளிராமைக்கு ரூபாய் 2 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் முகப்பு விளக்கு ஒளிராமல் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றத்திற்காக ஒருவருக்கு நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளின் முகப்பு விளக்கு ஒளிராமல் வாகனத்தைச் செலுத்தியமை தொடர்பாக கொடிகாமம் போக்குவரத்து பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டு குறித்த நபருக்கே இவ்வாறு நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்தது. (5-10-114)

கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களான என்.திருவாசகன், எஸ்.சிவதாசன், கிராம உத்தியோகத்தர் மோ.பிரகாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-114)

குறை'களை' பதிகம் 65

நாவலர் மண்டபத்தை கையளித்து நன்மை செய்மினே!

நல்லை நகர் நாவலர்
சைவத்தமிழின் காவலர்
என்று புகழ் சொல்வதால்
ஏதும் பயன் உண்டோ?

நம் நாவலர் கலாசார மண்டபம்
நலிவுற்றுக் கிடக்கின்ற
கோலம்தான் முறையோ!-அதை
குறைபடாமல் இருப்பது சரியோ!

புண்ணியர் ஆறுமுகநாவலர்
பிறந்து வளர்ந்த மனையில்
மண்டபம் கட்டிய
இந்து கலாசார அமைச்சு
கைவிட்டு வானம் பார்க்கிறது

அதைக் கையகப்படுத்தி
நாய்க்கு ஊசி போடும்
நாவலர் மண்டபமாக்க
யாழ். மாநகரசபை
நல்லாய்ப் பாடுபடுகிறது

நாவலர் மீது மாநகர சபைக்கு
ஏன் இந்தப் பகைமை
முன்பும் ஒருக்கால்,
நல்லூரில் வீற்றிருந்த
நாவலர் சிலையை
குப்பை வண்டியில்
ஏற்றிச் சென்று
பாதணி கழற்றும்
மண்டபப் பாதையில்
பறித்த பாதகம் நடந்தது

இப்போதும்
நாவலர் மண்டபமே
நாய்க்கு ஊசி
போடும் இடமாம்
வேண்டாம் இந்தப் பாவம்

நாவலர் கலாசார மண்டபத்தை
தந்தவர் கையில் மீண்டும்
நேர்மையாய் ஒப்படைப்பீர்
இந்து கலாசார அமைச்சு
நாவலர் மண்டபத்தை
நன்றே பேணி
அவர் ஞாபகத்தைப் போற்றட்டும்

நாவலர் வாழ்ந்த வீடு
நல்லதொரு உருத்திராட்ச மாலை
அவர் அணிந்த ஆடை ஆபரணம்
எழுதிய நூல், துண்டுப்பிரசுரங்கள்
சென்ற இடங்கள்
செய்த பிரசாரங்கள்
அமைத்த திண்ணைப் பள்ளிகள்
கஞ்சித் தொட்டிப் பணிகள்
அரசியலில் விதைத்த ஆளுமைகள்
அச்சுப் பணி சாதனைகள்
கல்விப் பணிகள்
கந்தபுராண படனங்கள்
சிதம்பரத்துத் தொடர்புகள்
நாவலர் பட்டம் வழங்கிய
திருவாவடுதுறை ஆதீனப் பணிகள்
தமிழில் மொழிபெயர்த்த
புனித விவிலியம்
அத்தனையும் நாவலர் மண்டபத்தை
நலமே அலங்கரிக்க,

வருவோரெல்லாம்
நாவலர் மண்டபத்தை
நாடிச் சென்று
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்
நற்பணியை நன்குணரட்டும்

நம்மவர் செய்த பெரும்பணியை
மற்றவரும் அறிய
நாவலர் மண்டபம்
முன்னமாய் நின்று
எங்கள் வரலாற்றைப் பேசட்டும்

கூத்தனார்

கன்னியாவில் தமிழருக்கு எதிரான அடக்குமுறையை கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த கோவில் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஆதீன முதல்வர் மீது சுடுநீர்த்தாக்குதல் உட்பட சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு- கிழக்கில் கடத்தப்பட்டும் கையளிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினால் நடத்தப்பட்ட இப்போராட்டத்தில் புத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை ஆதரித்த பின்னர் ஏன் சிவநேசன், சிறீதரன், யோகேஸ்வரன் கன்னியாவுக்கு சென்றார்கள்?, அவர்கள் எம்.பி பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்,

ரணில் தமிழர் தாயகத்தில் விகாரை கட்டுவதை நிறுத்து. சிங்கள புத்த மத பயங்கரவாதத்தினை நிறுத்த தமிழர்களுக்கு அமெரிக்கா ஜரோ ப்பிய ஒன்றியத்தின் உதவி தேவை போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தியவாறும் அமெரிக்க, ஜரோப்பிய ஒன்றிய கொடிகளை தாங்கிய வாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

879 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தாம் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கொட்டகைக்கு முன்பாகவே இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (9-299)

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து காணப்படுவதுடன் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் முதல் நோயாளர்கள் வரை நாய்க்கடிக்கு இலக்காகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

தினமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்று செல்லும் ஓர் இடமாக காணப்படும் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை வளாகத்தில் அண்மைய நாட்களாக கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதாவது வைத்தியசாலை வளாகத்திலும் வைத்தியர் விடுதிகளிலும் சுற்றாடலிலும் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் இவ்வாறு கட்டாக்காலிகளாக காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் நாய்கள் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச்செல்லும் நோயாளர்களை துரத்தி வருவதுடன், வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச்செல்லும் நோயாள் பலரும் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளனர். இதேவேளை வைத்தியசாலை வைத்தியர்கள் விடுதி வளாகத்திலும் இவ்வாறு நாயகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படும் நிலையில் அண்மையில் வைத்தியசாலை உத்தியோகத்தர் ஒருவரும் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார்.

அதிகளவான பொதுமக்கள் சிகிச்சை பெறும் இவ் வைத்தியசாலையில் காணப்படும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இவ் வைத்தியசாலை வளாகத்திலுள்ள கட்டாக்காலி நாய்களை இயக்கச்சியில் அமைக்கப்பட்டுள்ள நாய்கள் சரணாலயத்தில் கொண்டு சென்று விடுவதற்கான நடவடிக்கைகளை யாவது உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

கஞ்சாவுடன் இருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முற்பகல் புதிய பேருந்து நிலை யத்தில் வைத்து கஞ்சாவுடன் இருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற இருவரிடம் 86கிராம் மற்றும் 68 கிராம் கஞ்சாவை தமது உடையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் 41 மற்றும் 43 வயது டைய அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (9-299)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் மைதானத்தில் பார்வையாளர் கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனின் பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பா.கமலேஸ்வரியின் தலைமையில் இடம்பெற்றது.முன்னாள் அதிபர் கனகரத்தினத்தின் பெயர் சூட்டப்பட்ட இப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழாவில் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்- நெளுக்குளம் செய்தியாளர்)

தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் 200 பயனாளிகள் தெரிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஊடாக பயறு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோக பயிர்ச்செய்கையின்போது உபஉணவுச் செய்கைகளை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த பிரதி விவசாயப்பணிப் பாளர், மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் மூலம் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 50 வீத மானியத்தில் அவர்களுக்கான பயறு விநியோகிக்கப்பட்டு பயறு செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)

வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 22 ஆண்டு நிறைவு விழா நேற்று வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாருதம் சஞ்சிகையின் பத்தொன்பதாவது இதழ் வெளியீடு இடம்பெற்றது. அதன் முதற் பிரதிநிதியினை கலாபூஷணம் ஸ்தபதி சு.சண்முகவடிவேல் பெற்றார். அத்துடன் திருமதி.புவனேஸ்வரி சுந்தரலிங்கம் எழுதிய நிஜம் பருவங்கள் ஏன் எப்படி , மங்கையின் தன்னம்பிக்கை நூல்கள் வெளியிடப்பட்டன. சிறப்பு நிகழ்வாக கவிஞர் சோ.பத்மநாதன் மொழிபெயர்த்த தென்னாசியக் கவிதைகள் வெளியிடப்பட்டது அதனைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் , சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி க.சுவர்ணராஜா மற்றும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீகணேசன் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன்,இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்-குருமன்காடு செய்தியாளர்)

பெண் சிப்பாய் மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை புதிய வேலர் சின்னக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பெண் இராணுவச்சிப்பாய் மீது வீடு புகுந்து வெட்டியதில் பெண் இராணுவச்சிப்பாய் காயமடைந்துள்ளார்.

இதனைத் தடுக்கச் சென்ற சகோதரன் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஓமந்தை புதிய வேலர்சின்னக்குளம் பகுதியில் வசித்து வரும் பெண் இராணுவச்சிப்பாயின் வீட்டிற்குள் புகுந்த பக்கத்து வீட்டுக்காரர் இராணுவத்தில் பணி புரியவேண்டாம் அல்லது இங்கு இருக்கவேண்டாம் என்று தெரிவித்து அப்பெண்மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன்போது வெட்டு காயத்திற்குள்ளான பெண் இராணுவச்சிப்பாயை காப்பாற்றுவதற்காக ஓடிச் சென்ற சகோதரன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சகோதரியும் சகோதரனும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெட்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (9-299)

காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட வேரக்குளம் மற்றும் சலவைக்குள அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பங்குபற்றுதலோடு இடம்பெற்றது. இதில் பாதுகாப்புப் படைகளின் யாழ்.மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி தர்ஷன் ஹெட்டியாராச்சி, யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.நிசாந்தன், யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், காரைநகர்ப் பிரதேச செயலர் திருமதி. உஷா ஆகியோர் கலந்து கொண்டனர். (5-10)

மட்டக்களப்பில் கோரவிபத்து; ஒருவர் ஸ்தலத்திலேயே பலி!

(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை 16 ஆம் திகதி மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் ஸ்தலத்திலே பலியானார்.

கன்னங்குடாவைச் சேர்ந்த வரும் பண்டாரியாவெளியில் வசித்து வந்தவருமான இரண்டு பிள்ளைகளின் தந்தையான தவராசா தற்பரன் (வயது-41) என்பவரே இவ் விபத்தில் மரண மானவராவார்.

வவுணதீவு - ஆயித்தியமலை பிரதான வீதியில் முள்ளா முனை பகுதியில் வைத்து குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையில் உழவு இயந்திரத்துடன் மோதுண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

சட்டவிரோத மணல் அகழ்ந்தோர் விசேட பொலிஸ் பிரிவால் கைது

(கொடிகாமம்)

தென்மராட்சி பகுதியில் இடம் பெற்று வந்த மணற்கொள்ளை விசேட பொலிஸ் அணியினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த மாதம் தென்மராட்சி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதி நிதிகளால் தென்மராட்சி மற வன்புலவு பகுதியில் சட்டவிரோ தமான மண் அகழ்வு தொடர்பில் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனை அடுத்து குறித்த மணல் அகழ்வினை தடுப்பதற்காக விசேட பொலிஸ் அணி ஒன்று உருவாக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் அணியானது மிகவும் சாதுரியமான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபடுவோரை கைது செய்வதோடு கொள்ளையில் ஈடுபடுவோருக்கு துணை புரிவோரையும் கைது செய்து வருகிறார்கள்.

குறிப்பாக கடந்த மூன்று நாட்களில் மட்டும் 13 பேருக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதுடன் ஆறு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸாரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (5-114)

கால்வாயில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

(மீட்டியாகொட)

மீட்டியாகொட, மலவென்ன பிரதேசத்தில் வீதிக்கு அருகாமையில் கால்வாய் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கு அமைய மீட்டியாகொட பொலிஸாரால் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வெருஹெலிய பிரதேசத்தைச் சேரந்த 67 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஜ)

இடமாற்றக் கொள்கை உறுதி செய்யும் வரை இடமாற்றங்களுக்கு விண்ணப்பிப்பதில்லை

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அரச சாரதிகளின் இடமாற்றக் கொள்கையை உரிய அரச நிறுவனங்கள் உறுதி செய்யும் வரையில் இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்பதில்லை என வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் ஆளுநரிடம் அறிக்கை கையளித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து அமைச்சுக்கள் அவற்றின் திணைக்களங்களில் பணியாற்றும் சாரதிகளுக்கு ஒரேவிதமான இடமாற்றக் கொள்கை காணப்படுவதில்லை.

சுகாதார அமைச்சில் பணியாற்றும் சாரதிகளே இவ்வாறு இடமாற்றத்தை உரிய முறையில் மேற்கொள்வதில்லை.

சுகாதாரத் திணைக்களம் மற்றும் அமைச்சில் சாரதிகள் சுமார் 200 பேர் வரை கடமையாற்றும் நிலையில் கடந்த 2018 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் 9 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டும் இதுவரை மாற்றம் பெற்றுச் செல்லவில்லை.

இவ்விடயம் தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி புதன்கிழமை வடமாகாண ஆளுநரின் செயலரிடம் தமது கோரிக்கைகள் தொடர்பான எழுத்துமூல அறிக்கையினை வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் வழங்கியுள்ளது.

இவ் அறிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகளின் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் வரை அமைச்சுக்கள், திணைக்களங்களில் கடமையாற்றும் சாரதிகள் தங்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கப் போவதில்லை என கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-10)

கடைக்குச் சென்ற சிறுவன் விபத்தில் சிக்கி மரணம்

(கொழும்பு)

எரிபொருள் விநியோகம் செய்யும் பௌசர் ஒன்றுடன் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 9 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் - கொழும்பு வீதியில் மதுரங்குளிய - செம்பட்டே பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் மதுரங்குளிய - செம்பட்டே பகுதியைச் சேர்ந்த தில்ஷான் மதுசங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் வீட்டில் இருந்து பிரதான வீதியில் உள்ள கடைக்கு சென்ற போதே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

எரிபொருள் பௌசரின் சாரதி முந்தலம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். முந்தலம பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	60	80	90	100
உருளைக்கிழங்கு	120	130	130	125	140
பச்சைமிளகாய்	250	400	400	420	500
தக்காளி	80	100	90	85	120
மரவள்ளிக்கிழங்கு	140	200	160	100	120
கோவா	80	80	80	60	80
கரட்	160	160	170	120	200
பூசணி	100	120	100	70	120
புடோல்	80	90	80	60	120
வாழைக்காய்	120	130	120	60	120
சின்ன வெங்காயம்	100	120	100-180	100	140
பெரிய வெங்காயம்	100	110	120	110	140
பாகற்காய்	200	180	160	170	200
வெண்டிக்காய்	60	50	60	70	120
கருணைக்கிழங்கு	100	110	100	60	120
பயற்றங்காய்	50	60	60	70	80
லீக்ஸ்	120	80	90	70	120
பீற்றூட்	80	80	70	60	120
கறிமிளகாய்	200	140	300	120	240
முருங்கைக்காய்	150	200	100	120	120
போஞ்சி	150	120	140	100	160
கத்தரிதம்புள்ள	60	50	–	50	80
கீரை-1பிடி	40	20	30	30	30
தேசிக்காய்	150	250	180	250	400
தேங்காய்(ஒன்று)	40	25	15-40	25	20-40
இராசவள்ளி	200	200	160	100	160
வெங்காயப்பூ	200	150	180	150	200
முள்ளாங்கி	80	60	60	40	120
பொன்னாங்காணி	40	35	40	20	40
வல்லாரை	20	50	20	20	20
ஈரப்பலா	80	60	60	110	50

திடீரென தீப்பற்றி எரிந்த பேருந்து

(கொழும்பு)

ஹைலெவல் வீதியில் பயணித்த சொகுசு பேருந்து ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தமையால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மீகொடை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பேருந்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில், முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஹொரணை - கொழும்பு பயணிகள் பேருந்து ஒன்றை புதுப்பிக்கும் நடவடிக்கைக்காக கொண்டு செல்லும் போதே பேருந்தின் பின்பக்கத்தில் திடீரென தீப்பற்றியுள்ளது.

குறுகிய நேரத்திற்குள் பேருந்து முழுமையாகத் தீப்பற்றி எரிந்துள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பேருந்து தீப்பற்றியவுடன் பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், பேருந்து முழுமையாகத் தீப்பற்றி அழிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை எனவும் சம்பவம் தொடர்பில் மீகொட பொலிஸார் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

பாரதம்

பீகாரில் கனமழை 25 பேர் உயிரிழப்பு



(பீகார்)

பீகாரில் தொடர்ச்சியாகப் பெய்யும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

பீகாரில் பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

அந்தவகையில் மீட்புப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு 125 இயந்திரப் படகுகளும், தேசிய பேரிடர் பொறுப்புப் படை மற்றும் மாநிலப் பேரிடர் பொறுப்புப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் 199 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, 1.16 இலட்சம் பேர் வரை தங்க வைக்கப் பட்டுள்ளதுடன், அவர்களுக்கு தற்போது தேவையான அத்தியாவசிய உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. (7)

கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்திற்கு நீர் திறப்பு

(சென்னை)

கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த நீர் மூன்று நாட்களில் தமிழகத்தை வந்தடையும் என்று கூறப்பட்டுள்ளது.

ஜூன், ஜூலை மாதங்களுக்கான 40.43 டி.எம்.சி. நீரை கர்நாடகா, தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்தது.

ஆனால், மழை அளவு மற்றும் அணைக்கான நீர்வரத்தை பொறுத்து தண்ணீர் திறக்கப்படுவதை கர்நாடக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கு கர்நாடக அரசு சம்மதம் தெரிவித்த நிலையில் அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட அம்மாநில முதலமைச்சர் குமாரசாமி உத்தரவிட்டார். இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு காவிரியில் நீர் திறக்கப்பட்டுள்ளது. (ஜ)

மும்பையில் கட்டடம் இடிந்து விபத்து உயிரிழப்பு 15 ஆக அதிகரிப்பு



(மும்பை)

மும்பை - டாங்கிரியின் தண்டேல் பகுதியில் 4 மாடிக் கட்டடமொன்று இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

அண்மைய நாட்களாக மும்பையில் கனமழைபெய்து வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 11.40 மணியளவில் இந்தக் கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது. இதில் 50 க்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

இந்நிலையில் சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது கட்டட இடிபாடுகளில் இருந்து 15 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டிருந்ததாக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்தனர். (ஜ)

பங்களாதேஷில் கே

பத்து பேர் பரிதாபம

கும்பகோண பாடசாலை தீ

15ம் ஆண்டு நினைவுதினம்

(கும்பகோணம்)

கும்பகோண பாடசாலை தீ விபத்தின் 15ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன் தினம் செவ் வாய்க்கிழமை அனுஷ்டிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் திகதி கும்பகோணம் கிருஷ்ணா தொடக்கப் பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 94 குழந்தைகள் உடல் கருகி உயிரிழந்தனர். 18 குழந்தைகள் படுகாயமடைந்தனர்.

உலகையே கவலையில் ஆழ்த்திய இந்தக் கோரச் சம்பவத்தின் 15ஆம் ஆண்டு நினைவு தினம், நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் விபத்து நடந்த பாடசாலைக்கு முன்பாக, குழந்தைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களும் பொதுமக்களும் கண்ணீருடன் அஞ்சலி செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

உலகில் 821 மில் மக்கள் பட்டினியால்

ஐ.நா. அறிக்கையில் அதிர்ச்

(ஜெனீவா)

கடந்த ஆண்டில் மாத்திரம் 821 மில்லியன் மக்கள் பட்டினியால் அவதியுறுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 2017 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட இந்தத் தொகை 10 மில்லியன் அதிகமாகும்.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, வறுமைக் கோட்டின் கீழ் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஒரு தசாப்த காலமாக குறைந்து வந்த அந்த எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் அதிகரிக்கத் தொடங்கியது.

பருவநிலை மாற்றமும் புதிதாக ஏற்பட்ட போர்சூழ்நிலைகளும் அதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. உலகில் சுமார் 149 மில்லியன் குழந்தைகள் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், உலகின் பல பகுதிகளிலும் உடற்பருமனாலும்,

வெளிநாடு

கோர விபத்து பமாக மரணம்!

(டாக்கா)

வடமேற்கு பங்களாதேஷில் திருமண வைபவத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த தவர்களை ஏற்றிச் சென்ற வானொன்று புகையிரதத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மணமகன் மற்றும் மணமகள் உட்பட குறைந்தது 10 பேர் பலியாகியுள்ளனர்.

தலைநகரிலிருந்து சுமார் 145 கிலோமீற்றர் தொலைவிலுள்ள உலஹ்பரா பிராந்தியத்தில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையொன்றை அந்த வான் கடக்க முயற்சித்த போது டாக்கா நகரை நோக்கிப் பயணித்த புகையிரதத்தால் மோதுண்டு விபத்துக்குள்ளானதாகவும் விபத்து இடம்பெற்றபோது அந்த வானில் 14 பேர் இருந்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் மணமகன் மற்றும்மணமகள்உட்பட 8பேர்சம்பவ இடத்திலேயும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையிலும் உயிரிழந்துள்ளனர். (ஜ)

ல தீ விபத்தின் ம் அனுஷ்டிப்பு

ில்லியன் ால் அவதி

திர்ச்சி தகவல்

கூடுதல் எடையாலும் எல்லா வயதுப் பிரிவினரும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

பசியையும், உணவுப் பொருள் மீதான கட்டுப்பாட்டையும் ஆயுதமாகப் பயன்படுத்தி, பயங்கரவாதக் குழுக்கள் சமூகங்களைப் பிளவுபடுத்துவதாக அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு இல்லாமல், ஒருபோதும் அமைதியும் சமூக உறுதிப்பாடும் சாத்தியப்படாது என்று ஐ.நா அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ)

ஒரே நாளில் 8 இலட்சம் டொலர் செலவுசெய்த மலேசியப் பிரதமர்



(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் இத்தாலியில் ஆடம்பர நகை கொள்வனவு செய்வதற்காக 'கடனட்டை' மூலம் ஒரே நாளில் பெருந் தொகைப் பணம் செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நீதி மன்றத்தில் பிறிதொரு வழக்கு விசாரணை ஆரம்பமானது.

குறித்த நகைகளை வாங்கு வதற்காகக் கடந்த 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8 ஆம் திகதி தனது 'கடனட்டை' மூலம் ஒரே நாளில் 8 லட்சம் அமெரிக்க டொலர்களை முன்னாள் மலேசியப் பிரதமர் செலவு செய்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர் தோல்வி அடைந்ததை தொடர்ந்து, அவர் மீதான ஊழல் வழக்கு விசாரணை விரைவுபடுத்தப்பட்டு மலேசிய நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. (ஜ)

பயங்கரவாதி ஹபீஸ் சயித் பாகிஸ்தானில் கைது



(இஸ்லாமாபாத்)

மும்பைத்தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட பயங்கரவாதி ஹபீஸ் சயீத் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியாவில் மும்பைத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தீவிர வாதத் தாக்குதல்களில் தொடர்புடைய பாகிஸ்தான் பயங்கரவாதி ஹபீஸ் சயீத் பாகிஸ்தானில் சுதந்திரமாக உலாவி வந்தார். அமெரிக்க அரசால் கடந்த 2014ஆம் ஆண்டு சர்வதேச பயங்கர வாதியாக பிரகடனப்படுத்தப்பட்ட ஹபீஸ் சயீத்தின் தலைக்கு ஒரு கோடி டொலர் பரிசு அறிவிக் கப்பட்டது.

ஹபீஸ் சயீத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா சர்வதேச நாடுகள் மூலம் பாகிஸ்தானுக்கு கடும் அழுத்தம் அளித்து வந்தது. அதன் பின்னர் லஷ்கர் இ தொய்பா மற்றும் ஜமாத் உத்தவா ஆகிய அமைப்புகள் தொடர்பான வழக்குகளை பாகிஸ்தான் அரசு தீவிர விசாரணை நடத்தியது.

இந்த நிலையில், ஹபீஸ் சயீத் லாகூரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன என்று ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஜ)

மலேசியாவில் தேடுதல் வேட்டை 166 வெளிநாட்டினர் கைது

(கோலாலம்பூர்)

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சட்டவிரோத குடியேற்றவாசிகளாக கருதப்பட்ட 166 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியாவில் சட்டவிரோதமாக குடியேறியிருப்பவர்களை கண்டுபிடிக்கும் நோக்கில் மலேசிய பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தேடுதல் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது 555 குடியேற்றவாசிகள் பரிசோதிக்கப்பட்டதாகவும் அவர்களில் 166 பேர் சட்டவிரோதமாக தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த தேடுதல் நடவடிக்கையில், 18 இந்தியர்கள், 55 மியன்மரிகள், 45 வங்கதேசிகள், இந்தோனேசியாவைச் சேர்ந்த 17 பேர், 9 நேபாளிகள், 4 பாகிஸ்தானியர், பிலிப்பைன்சைச் சேர்ந்த ஒருவர் மற்றும் 17 ஆபிரிக்கர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ)

சீனப் பொருளாதார சரிவிற்கும் வர்த்தக உடன்பாட்டுக்கும் தொடர்பில்லை - பீஜிங்

(பீஜிங்)

சீனப் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டமைக்கும் அமெரிக்கா உடனான வர்த்தக உடன்பாட்டுக்கும் தொடர்பில்லை என்பதை பீஜிங் தெளிவுபடுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வர்த்தக உடன்பாடு தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் சீன வெளியுறவு அமைச்சு பேச்சாளர் மேற்படி கருத்தை கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்க ஜனாதிபதியின் கூற்று முற்றிலும் தவறானது என்று கூறியதுடன், வர்த்தக உடன்பாட்டை இரு நாடுகளுமே செய்துகொள்ள விரும்புகின்றன. அது ஒருதரப்பு விருப்பம் மட்டுமல்ல என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். சீனப் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளமையினால், அமெரிக்காவோடு அது வர்த்தக உடன்பாடு செய்துகொள்வது அவசியமாகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

சீன இறக்குமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள தடை, பீஜிங்கைக் கடுமையாகப் பாதித்துள்ளது என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

மரண தண்டனையை விட சீர்திருத்த தண்டனைகளே சிறந்த சமூகத்தை உருவாக்கும்

சிறிநேசன் கூறுகிறார்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனை தொடர்பிலும், மரண தண்டனை தொடர்பிலும் மட்டுமே ஜனாதிபதி தனது கவனத்தினை செலுத்தியுள்ளார். அவர் மரண தண்டனையை விட சீர்திருத்த தண்டனைகளே சிறந்த சமூகத்தினை உருவாக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தினை வீழ்த்துவதன் ஊடாக இதனைவிட சிறந்த, திறமையான, சாதகமான அரசாங்கத்தினை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தினை அகற்றிவிட்டு உருவாக்கும் அரசாங்கம் இந்த நாட்டினை அதள பாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்ற அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவினை நாடாளுமன்றத்தில் எடுத்துள்ளது.

இன்று கடந்த கால ஆட்சியாளர்களை மீண்டும் கொண்டு வருவதற்காக கடந்த கால ஆட்சியில் சுகபோகங்களை அனுபவித்தவர்கள் புதிய கட்சிகளை ஆரம்பிக்கும் முயற்சிகளை மேற் கொள்கின்றனர்.

கடந்த காலத்தில் தமிழர்களின் போராட்டத்தினை காட்டிக் கொடுத்தவர்கள் இன்று வேறு வடிவங்களில் தமிழர்களின் ஒற்றுமையினை சீர்குலைக்க முனைவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய இன்டர்போலின் உதவியை நாட நடவடிக்கை

(காலி)

காலி துறைமுகத்தில் இருந்து 154 கடல் மைல் தூரத்தில் ஆழ்கடலில் பயணித்த படகில் இருந்து கடந்த வாரம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 106 கோடி ரூபா மதிப்புள்ள 70 கிலோ ஹெரோயின் போதைப் பொருளானது. சர்வதேச போதைப் பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய ஈரான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் இருவரால் அனுப்பப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகள் ஊடாகத் தெரியவந்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் முன்னெடுக்கும் விசேட விசாரணைகளிலேயே இவை தெரியவந்துள்ள நிலையில், அப் படகில் இருந்து கைது செய்யப்பட்ட 9 ஈரானியர்களிடம் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரர்களான குறித்த ஈரான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகளை கைதுசெய்ய இன்டர் போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரின் உதவியை நாட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ஜ)

இலங்கையில் கால் பதிக்கிறது சீன எண்ணெய் நிறுவனம்

(கொழும்பு)

சினோபெக் (Sinopec) எனப்படும் சீனாவின் பெற்றோலிய மற்றும் இரசாயனவியல் நிறுவனம், இலங்கையில் எரிபொருள் நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பிரதான கடல்வழிப் பாதையில் செல்லும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகங்களை மேற்கொள்ளும் வகையில், இந்த எண்ணெய் நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சினோபெக் தெரிவித்துள்ளது.

இலங்கையில் Fuel Oil Sri Lanka Co Ltd என்ற பெயரில் இந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டையில் இந்த நிறுவனம் செயற்படவுள்ளது.

இந்த நிறுவனத்தினால் கப்பல்கள் மற்றும் மின்உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. (ஜ)

கருங்குளவிகள் கொட்டியதில் பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் இடம்பெற்ற கருங்குளவித் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் நிலைய வளாகத்தை அவர் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த கருங்குளவிகள் பொலிஸ் உத்தியோகத்தரின் தலையிலும் மார்பிலும் கொட்டியுள்ளன.

மயக்கமடைந்த அவர் அருகிலுள்ள வாகரை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், கருங்குளவித் தாக்குதலுக்குள்ளாகி 45 நிமிட நேரத்தில் அவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக வாகரைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஜ)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

மண்பானை மகத்துவம்

"எங்கள் அம்மா அழகான ஒரு மண்குடம் வாங்கிக் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு போய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவள் உடனே அதை வான் குடமாக மாற்றி விட்டாள்". என்றார் ஒருத்தர்.

எப்படி அது? என்று கேட்டேன். ஒன்றுமில்லை கீழே போட்டு உடைத் து விட்டாள்! என்றார். அப்படியென்றால் அது எப்படி பொன்குட மாகும்?

நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமென்று? இவ்வாறு விளக்கம் கொடுத்தார். மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட அந்தக் காலத்தில் மண்குடம் பொன்குடம் மாதிரித் தான்.

மண்பானையிலே அவ்வளவு மகத்துவம் இருக்கின்றது. தண்ணீரை சுத்தமாக்கிக் குடிக்க வேண்டும் என்பதற்காக இப்ப பல பேர் என்ன செய்கின்றார்கள் தெரியுமா? வோட்டர் ஃபில்டர் பயன்படுத்துகின்றார்கள். அதே போல் தண்ணீர் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஃபிரிட்ஜ் பயன்படுத்துகின்றார் கள்.

இது இரண்டு காரியத்தையும் செலவு இல்லாமல் நமக்கு செய்து கொடுப்பது மண் பானை. உலோகப் பாத்திரங்களிலே தண்ணீர் ஊற்றி வைத்திருந்தோம் என்றால் அதிலே கிருமிகள் அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் மண்பானையிலே தண்ணீரை ஊற்றிவைத்தால் அப்படி ஆவதில்லை. தண்ணீரில் உள்ள கிருமிகள் எல்லாம் மண்பானை இழுத்துக் கொள்கின்றது. குடிநீர் சுத்தமாகின்றது.

அந்தக் காலத்திலே நம் முன்னோர்கள் இதை நன்றாக புரிந்து வைத்திருந்தார்கள். இந்தக் காலத்திலே ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு நாமும் அதை புரிந்த கொள்ள ஆரம்பித்திருக்கின்றோம்.

மண் பானை என்பது ஒரு தலைசிறந்த வோட்டர் ஃபில்டர் என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஐதராபாத்திலே உள்ள உணவு ஆராய்ச்சிக்கழகம் இதைக்கண்டுபிடித்து சொல்லியிருக்கின்றது.

இதற்குப் பின் நாம் சும்மா இருக்கலாமா? உடனே போய் ஒரு மண் பானை வாங்கிக் கொண்டு வந்து விட வேண்டியது தானே.

பானையை எடுத்துத் தட்டிப பாருங்கள். வெங்கலப் பாத்திரத்தை தட்டுவது போல் சத்தம் வந்தது என்றால் அது நல்ல பானை. பானைக்கு வெளிப்பக்கம் கருப்புத்திட்டா தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நல்லா வெந்திருக்கின்றது என்று அர்த்தம். வேற ஒன்றுமில்லை.

சிலது சாம்பல் பூத்து சொர சொரப்பாக இருக்கும். அது வேண்டாம். வெளிப்பக்கம் இருப்பது போல் உள்பக்கமும் கருப்பு திட்டாக இருந்தால் அதை வாங்க வேண்டாம். சிறிது நாளில் உடைந்து விடும்.

சிறு பானையில் தண்ணீரை ஊற்றியவுடனே உஸ் என்று ஒரு சத்தம் வரும். உள்ளே பாம்பு இருந்து சீறுவது போல் இருக்கும் பயந்து விடாதீர்கள். பானையிலே களிமண்ணோடு மணல் கலந்திருக்குமே அந்த மணல் தண்ணீரை உறிஞ்சுகின்ற சத்தம் தான் அது.

வெயில் காலத்திலே நமக்கு வியர்க்கின்றது போல் பானைக்குள் தண்ணீர் ஊற்றியவுடனே அதன் வெளிப்பக்கம் வியர்க்கும். கொஞ்ச நாளில் நுண்கிருமிகள் துளைகளை அடைப்பதனாலே வியர்ப்பதில்லை. அதனால் பரவாயில்லை.

பானைக்கு வெளிப்பக்கமோ உள்பக்கமோ சிமெண்ட் பூசியிருந்தால் அது வேண்டாம். அதனால் உஷ்ண காற்று உள்ளேயே தங்கும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது. இந்த கோடை காலத்திற்கு மண்பானை தண்ணீரை விட சிறந்த பானம் வேற எதுவும் கிடையாது.

மட்டமாக தயாராகுகின்ற கலர்–சோடா–சர்பத் இதையெல்லாம் வாங்கி கன்னாபின்னா என்று குடிக்காதீர்கள். அதிலே சேர்ந்திருக்கின்ற கலரும் உடம்பிற்குக் கெடுதல். சில பேர் தண்ணீரையும் சுத்தப்படுத்தாமல் சேர்த்திருப்பார்கள். காய்ச்சல்–வயிற்றுப் போக்கு எல்லாம் கூட வந்து விடும்.

இளநீர்–நுங்கு–எலுமிச்சம்பழம்–மோர் இதுவெல்லாம் கிடைத்தால் விடாதீர்கள். இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டிய தூரத்திலே இருக்கின்ற மண்பானைக்கு தண்ணீருக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையான தாகத்தை தணிப்பது அது தான்.

என்ன சேர் எங்கே செல்கின்றீர்கள். பானை வாங்குவதற்குத் தானே. சரி போயிற்று வாங்க! இன்றைக்கு இதைக் கேட்டவுடனே நாளைக்கு சில வீடுகளிலே என்ன நடக்கும் என்பதை பற்றி ஒரு சின்னக் கற்பனை.

ஒரு பெரிய சங்கீத வித்துவான் கடம் வாசிக்கின்றவர். ஒரு கச்சேரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். புறப்படுவதற்கு முன் மனைவியைக் கூப்பிட்டார்.

கச்சேரிக்குப் போய் வருகின்றேன். அதற்கு முன்னாடி உன் கையாலே ஜில் என்று ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து கொடு. குடித்து விட்டு செல்கின்றேன் என்றார். அந்த அம்மாவும் கொண்டு வந்து கொடுக்க வாங்கிக் குடிக்கின்றார். வெயிலுக்கு இதமாக இருக்கு!

பேஷ் மண்பானை தண்ணீரா? காலமறிந்து இடமறிந்து சமயமறிந்து நடப்பதிலே உன்னை எவரும் மிஞ்ச முடியாது. மிக்க நன்றி என்றார். உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்றார் அந்த அம்மா. ஏன் என்று கேட்கிறார் இவர்.

நேற்று இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நம்ம வீட்டில் மண்பானையாக பயன்படுத்துவதே உங்களுடைய "கடம்" தான்.

சிங்கள பேரினவாதம் இந்துக்களை குறிவைப்பது தொடர்ந்தால் இந்தியாவின் 100 கோடி இந்துக்களின் நேரடித்தலையீட்டை கோருவோம்

ரெலோ எச்சரிக்கை

கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் இடித்து அழிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அங்கு திரண்ட தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த-சிங்கள இனவெறி தனது கோர முகத்தைக் காட்டியுள்ளது. இது தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகம் ந.ஸ்ரீகாந்தா அனுப்பியுள்ள கண்டன அறிக்கையில், தென்கைலை ஆதீனம் அகத்தியர் அடிகள் மீதும், கன்னியா வெந்நீரூற்றுக் காணியின் உரிமையாளர் பெண் ஒருவர் மீதும் மேற்கொள்ளப்பட்ட கீழ்த்தரமான தாக்குதல் மூலம் பௌத்த-சிங்கள இனவெறியின் காட்டுமிராண்டித்தனம் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அங்கிருந்த பொலிஸ்படை தவறியிருக்கின்றது.

மாறாக அங்கு திரண்டு வந்திருந்த தமிழ் மக்கள் மீது அடக்குமுறை கலந்த அழுத்தம் பொலிஸாரால் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பாரபட்சமின்றி செயற்பட வேண்டிய பொலிஸ் அதிகாரிகள் சிங்கள-பௌத்த உணர்வாளர்களாக செயற்பட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

இவற்றுக்கெல்லாம் மூல காரணம் நல்லாட்சி அரசாங்கத்தின் அணுகுமுறையும், நடவடிக்கைகளுமே ஆகும். இனவெறியுடன் செயற்படும் தொல்லியல் திணைக்கள அதிகாரப் பிரபுக்களை விருப்பம் போல ஆடவிட்டு சிங்கள-பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு மறைமுகமான ஆதரவை அரசாங்கம் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

அரசாங்கத்திற்குள்ளே ஓர் அரசாங்கம் போலவே தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வந்துள்ளது.

ஆயிரம் விகாரைகளை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அமைக்கப் போவதாக கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பகிரங்கமாக பிரகடனம் செய்த ஜக்கிய தேசியக்கட்சி தலைமை நல்லாட்சி அரசாங்கமே கன்னியா பிரச்சினைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இதே வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்லை என்றால் நான் இன்று பிரதமராக உங்கள் முன் நின்று கொண்டிருக்க முடியாது என்று சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை நகரில் மனந்திறந்து பேசிய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு கன்னியா பிரச்சினையில் தமிழ்மக்களின் உரிமையை நிலைநாட்டுவதோடு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுத்தாக வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் திருகோணமலை மாவட்டத்தில் தமது அடிப்படை உரிமைகளுக்கு தமிழ் மக்கள் போராட வேண்டியுள்ள நிலைமையில் அரசாங்கத்திற்கு அழுத்தம்கொடுத்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்க கூட்டமைப்பு தவறினால் அதன் நாட்கள் எண்ணப்படும் நிலைமை தவிர்க்கப்பட முடியாதது என்பதை சம்பந்தப்பட்ட சகலரும் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தனை காலமும் எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் இந்திய துணைக்கண்டத்தில் வாழும் எட்டு கோடி தமிழர்களின் ஆதரவையே நாம்தொடர்ந்து நாடி வந்திருக்கின்றோம். ஆனால் தமிழ் இனத்தின் வரலாற்றையும் இருப்பையும் வாழ்வையும் சிதைக்கச்செயற்படும்பௌத்த - சிங்கள பேரினவாதம் இந்துக் கோவில்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் தொடர்ந்து குறிவைக்கப்போகிறது என்றால் இந்தத் திட்டத்தைத் தகர்த்தெறிய இந்திய நாட்டின் நூறு கோடிக்கு மேற்பட்ட இந்துக்களின் நேரடித் தலையீட்டை நாம் பகிரங்கமாக கோரவேண்டியிருக்கும் என்பதை சகல சிங்களக் கட்சிகளையும் சேர்ந்த பௌத்த - சிங்கள பேரினவாதிகள் அனைவருக்கும் நாம் கூறிக்கொள்கின்றோம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

ரணிலை காப்பாற்றிய சம்பந்தன் கன்னியாவை காப்பாற்ற வேண்டும்

பிரபா கணேசன் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தை காப்பாற்றுவதில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் காட்டும் அக்கறை தனது சொந்த தொகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக பிக்குமார் முன்னெடுத்திருக்கும் ஆர்ப்பாட்டத்தில் காட்டாமல் இருப்பது சம்பந்தன் தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில்,

இன்று நாட்டில் முக்கியமான பிரச்சினையாக திகழ்ந்து கொண்டிருக்கும் கன்னியா விவகாரம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.

இல்லாவிடில் இது ஒரு இனக் கலவரத்தை நோக்கி நகரக் கூடிய அபாயம் உள்ளது.

ஆகவே இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேசி முடிவெடுக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளது.

குறிப்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு பாரிய கடப்பாடு உள்ளது.

கடந்த சில வருட காலமாக ஜக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை காப்பாற்றி வரும் இவர் இந்தப் பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க தவறுவாரேயாயின் வரலாறு இவரை மன்னிக்காது.

குறைந்த பட்சம் இந்து கலாசார அமைச்சரிடம் கூட இவர் இது சம்பந்தமாக கலந்துரையாடவில்லை என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம்.

ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி இப்பிரச்சினையில் நேர்மையான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த பிக்குமார்கள் களத்தில் இறங்கிய பொழுது அதனை தமிழர்கள் ஆதரித்தால், அது தமிழ் மக்களுக்கு எதிராக நிச்சயம் திரும்பும் என்று நான் ஊடகங்கள் வாயிலாக எச்சரிக்கை விடுத்திருந்தேன். இன்று அது இடம்பெற்று வருகின்றது.

ஆகவே அரசியலில் பௌத்த பிக்குமார்களின் தலையீட்டை நிறுத்த வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

ஜக்கிய தேசியக் கட்சி இந்த கன்னியா விவகாரத்தில் தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் முயற்சி எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

தாக்குதல் நடத்திய காடையர்கள் கைது செய்யப்பட வேண்டும்

சைவ மகா சபை கண்டனம்

கன்னியா போராட்டத்தின் போது ஆதீன முதல்வர் மீது பொலிஸார் முன்னிலையில் தேநீர் வீசி தாக்குதல் நடத்திய காடையர்கள் கைது செய்யப்டாமைக்கு சைவ மகா சபை கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

சாத்வீகமான முறையில் கன்னியாவின் தமிழர் பூர்வீகத்தை பாதுகாக்கும் போராட்டத்தை வழிநடத்திய தமிழர் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவராகிய வணக்கத்துக்குரிய தென் கயிலை ஆதீனத்தின் மீது வன்ம உணர்வோடு பொலிஸ் வாகனத்துக்குள்ளேயே வைத்து தேநீர் வீச்சினை மேற்கொண்டவர்கள் மீது இது வரை எந்த நடவடிக்கையுமில்லை.

போராட்டத்தை அஹிம்சை முறையில் மேற்கொண்ட தமிழ் மக்கள் கொடுங்கரங்கள் கொண்டு அடக்க முற்பட்டுள்ளனர்.

ஒட்டு மொத்த தமிழ் மத, அரசியல், சமூக தலைமைகளும் தங்கள் கடுமையான எதிர்வினையை வெளிப்படுத்த வேண்டும் என வேண்டி நிற்கும் அதே நேரம் அடக்கு முறையையும் மீறி கிளர்ந்தெழுந்த மக்கள் அனைவருக்கும் தெரிவிப்பதாக மேலும் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

சிங்கள பேரினவாத செயற்பாடுகள் இன,மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது

இலங்கை இந்து சமய தொண்டர்சபை

கன்னியாவில் இடம்பெற்ற இனவாதச் செயலை கண்டித்து இலங்கை இந்துசமய தொண்டர் சபை அனுப்பியுள்ள கண்டன அறிக்கையில்,

திருகோணமலை கன்னியா என்பது தமிழர்களின் பூர்வீக இடமாகும். இதற்கு வரலாற்றுச் சான்றுகளே பல உண்டு. இருந்தும் சிங்கள பௌத்த காலனித்துவம் இராணுவ இயந்திரமும் இணைந்து திட்டமிட்ட வகையில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு தொல்பொருள் திணைக்களமும் உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றது.

இம் முயற்சிக்கு எதிப்புத் தெரிவித்த எமது திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் சுவாமி சிவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலய காணி உரிமையாளர் கோகிலரமணி அம்மாவையும் பொலிஸார் தமது வாகனத்தில் அழைத்துச் சென்ற போது சிங்கள காடையர்கள் சுவாமி மீதும் அம்மா மீதும் தேநீரால் ஊற்றிதகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர். இதனைப் பொலிஸார் வேடிக்கை பார்த்துள்ளனர்.

இவ்வாறு எமது தமிழர் பாரம்பரியமான வரலாற்று இடங்கள், ஆலயங்கள் என்பவற்றை திட்டமிட்டு சிங்கள பேரினவாத அரசு அபகரித்து வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் ஒருபோதும் இந்த நாட்டிலே சமாதானத்தையோ இன,மத நல்லிணக்கத்தையோ ஏற்படுத்தாது. மாறாக பிரிவினையையே தோற்றுவிக்கும். எனவே எமது வணக்கத்துக்குரிய ஆதீனசுவாமிகள் மீதும் மற்றும் அம்மா மீதும் தேநீரால் ஊற்றி அவமதித்தமை, எமது வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டமை என்பவற்றை மிகவும் வன்மையாக கண்டிப்பதோடு இவ்வாறான செயற்பாடுகள் தொடராது சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். தவறும்பட்சத்தில் மக்கள் போராட்டங்கள் நாடுதழுவியரீதியில் தொடரும் என அவர்களது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

இன வெறியர்களின் செயற்பாடுகளால் எமது இலக்கு நோக்கிய பயணங்கள் சிதைக்கப்படுகின்றன

அங்கஜன் எம்.பி.

மதத்தினாலும் கலாசாரத்தினாலும் ஒன்று என கூறுபவர்களின் இவ்வாறன கபடத்தனமான செயற்பாடுகள் காரணமாக எமது இலக்கு நோக்கிய பயணங்கள் சிதைவுறுத்தப்படுகின்றன.

அதேபோன்று எமது கலை, கலாசாரங்களை மருவி இன்னொன்றை புத்துருவாக்கிகொள்வது உயிரோட்டமான ஆசீர்வாதத்தை வழங்காது என நடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கையை ஆண்ட பத்து தலைகளை உடைய இராவண அரசன் தனது தாயாருக்கு இறுதிகிரியைகளை செய்வதற்காக கன்னியா நீர் ஊற்றை உருவாக்கியதாக நம்பிக்கை காணப்படுகிறது. எனவே அவ்வாறான இடத்தில் அகிம்சை வழியில் போராட்டத்தை இணைந்து முன்னெடுத்த அகத்தியர் அடிகளார் மீது தேநீரால்ஊற்றியமைமுரணை தோற்றுவித்தோருக்கு சாபகேடுக்குரியதாகும். அதன் விமோசனம் வலிகளை அறிந்து உரிய வழிகளை தோற்றுவித்தாலே அன்றி பிரதிபலிப்புக்கள் அபரிமிதமானதாகவே இருக்கச் செய்யும்.

மோதலின் மூலம் படிநிலையான மாற்றங்கள் இடம்பெற வேண்டுமே தவிர அதளபாதாளத்திற்குள் அனைவரையும் இட்டுசெல்வதாக அமையக்கூடாது. மோதலின் பிரதிபலிப்புக்களை உரிய முறையில் ஆராயப்பட்டு முறையான விம்பங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். போராட்டங்களின் மூலம் தீர்வுகள் கிடைக்கப்பெற வேண்டும். போராட்டங்களை ஆதரிக்கின்றோம் உரியவாறு நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இருக்குமானால் முழுமையான போராட்டத்தை முன்னெடுக்கவும் தயங்கப்போவதில்லை எனவும் அவரது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். (9-10-30)

தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

கூட்டுரிமைச்சொத்து (Condominium Property) மற்றும் இருபிடிக்கூறுகள் சொத்து (Apartment ownership) என்றால் என்ன?

இலங்கைச் சட்ட வரைபில் இருபிடிக்கூறுகள் சொத்தாண்மை சட்டத்தின் (Apartment Ownership Law) கீழேயே இவ்விருவகையான சொத்துக்களும் (கூட்டுரிமைச்சொத்து மற்றும் இருபிடிக்கூறுகள் சொத்து) கையாளப்படுகின்றன. இவ்விருவகையான சொத்துக்களுக்கும் இடையேயான வேறுபாடுபற்றி சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அதாவது ஒரு கட்டடம் தனித்தனி வீடுகளாகவோ அல்லது தனித்தனி வியபாரக்கூறுகளாகவோ பிரிக்கப்பட்டு கையாளப்படும் முறை பற்றியே சட்டம் கூறுகின்றது. பொதுவாக கூட்டுரிமைச்சொத்து என்பது ஒரு சொத்தில் ஒவ்வொரு கூறுக்கும் (வீட்டுக்கும்) தனித்தனி ஒருவர் உரிமையாளராகவிருப்பர். இருபிடிக்கூறுகள் சொத்து என்றால் அது ஒருவருக்கு சொந்தமாகவிருக்கும். அதிலுள்ள தனி அலகுகளில் தனித்தனி நபர்கள் (வாடகைக்கு) குடியிருப்பார்கள்.

தொடர்மாடிக் கட்டடத்தில் ஒருவர் வீட்டு அலகினைக் கொள்வனவுசெய்யும்போது அவர் கொள்வனவுசெய்வதுதரை மாடியாக (ground floor) இருந்தாலென்ன பத்தாவது மாடியாக (10th floor) இருந்தாலென்ன ஒரு குறிப்பிட்ட கனவளவுக்கு அடக்கமான வெளிப் பிரதேசத்தையே (cube of space) கொள்வனவு செய்கிறார் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.



தொடர்மாடிக் கட்டட கூட்டுரிமை வீட்டின் (Codominium Parcel) எல்லைகள்.



கூட்டுரிமை வீடுகளின் / Condominium Parcel எல்லைகள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, கீழ் (Nadir) மற்றும் மேல் (Zenith) என்பவையாகும்.

இதன் உள்ளடக்க பகுதியே Condominium Parcel எனப்படுகிறது. அதுவே உங்களுக்கு தனி உரிமையானது.

பொதுவாக ஒரு காணித்துண்டு (land Parcel) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என 4 பக்க எல்லைகளைக் கொண்டிருக்கும். 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மைச் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 41 (6) ன்படி, தொடர்மாடிக்கட்டட கூட்டுரிமை வீட்டின் (Condominium Parcel) எல்லைகள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, கீழ் (Nadir) மற்றும் மேல் (Zenith) என 6 பக்கங்களால் வரையறுக்கப்படுவதோடு அதன் உள்ளடக்க பகுதியே Condominium Parcel எனப்படுகிறது. இந்த 6 பக்கங்களும் ஒன்றில் அடுத்துவரும் அலகுடன்/வீட்டுடன் பங்குரிமையாக இருக்கும் அல்லது அவ்வீட்டையும் ஒரு பொது கூறையும் பிரிக்கும் எல்லையாகவிருக்கும். மேலும் கூட்டுரிமை வீடு பங்குடைமை வீடு எனவும் அழைக்கப்படும்.

தொடர்மாடிக் கட்டடத்தில் இருக்கும் ஒரு வீட்டு அலகின் சொந்தக்காரருக்கு அத் தொடர்மாடிக் கட்டடத்தில் அவருக்கு இருக்கக்கூடிய சொத்துரிமை.

அதாவது அவ் வீட்டு அலகின் உள்பகுதி மட்டுமே அவருக்குச் சொந்தமென்று கூறலாம். அக்கட்டடம் அமைந்துள்ள காணி அத் தொடர்மாடிமனைகளின் (Apartments) சொத்தாண்மையாளர்கள் எல்லோருக்கும் பொதுவானது. அக்காணி தரைமாடிக்கட்டட அலகுகளின் (units of ground floor) உரிமையாளர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல.

அதாவது தொடர்மாடிமனைகளில் இருப்பிடிக் கூறொன்றை (Apartment) வைத்திருக்கும் ஒருவருக்கு இருவகையான சொத்தாண்மை உண்டு. அவற்றுள் ஒன்று அவர் வாங்கிய தனியலகுக்கான (individual unit / condominium parcel) சொத்தாண்மை. அதற்கான உறுதிப்பத்திரம் அவரிடமிருக்கும். மற்றையது அக்கட்டடத்தொகுதியின் பொது கூறுகள்/அம்சங்களை (common elements) மற்ற வர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற சொத்தாண்மை. இப் பொதுகூறுகள் பற்றி அவருடைய தனியலகுக்கான உறுதிப்பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும்.

தொடர்மாடிக் கட்டடத்தில் ஒருவர் வீட்டு அலகினைக் கொள்வனவு செய்யும் போது அவர் கொள்வனவு செய்வது தரைமாடியாக (ground floor) இருந்தாலென்ன பத்தாவது மாடியாக (10th floor) இருந்தாலென்ன ஒரு குறிப்பிட்ட கனவளவுக்கு அடக்கமான வெளிப் பிரதேசத்தையே (cube of space) கொள்வனவு செய்கிறார் என்பதை அறிந்திருத்தல் வேண்டும்.

ஒரு தொடர்மாடிக் கட்டடத்தின் 6 பக்கச் சுவர்களின் உரிமை



A,B,C,D,E,F,G,H,J என்பன தனித்தனி வீடுகள். இங்கு வீடு Eயை எடுத்தால் அதன் இடதுபக்கச்சுவரும் Fஇன் வலது பக்கச் சுவரும் ஒன்றாக இருப்பதோடு அச் சுவர் Eக்கும் Fக்கும் சொந்தமானது.

எனவே இச்சுவரில் ஏதும் திருத்த வேலைகள் செய்யும் போது முகாமைத்துவ கழகத்தின் அனுமதியுடன் E இன் உரிமையாளரும் Fஇன் உரிமையாளரும் ஒற்றுமையாக திருத்த வேலைகளைச் செய்ய வேண்டும். இவ்வாறே மற்றைய சுவர்களின் (கூரை, நிலம் உட்பட) திருத்த வேலைகளும் நடைபெற வேண்டும்.



பொதுவாக கூறுவதானால் உரிமையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- தனியலகு (individual unit / condominium parcel) உரிமை.
- பொது அம்சங்கள் /பொதுக்கூறுகள் (Common elements) உரிமை.

ஒருவரின் அல்லது சிலரின் பாவனைக்கு மட்டும் (வாகன தரிப்பிடம் போன்றவை) உரித்தான பொதுக் கூறுகளில் (limited common elements) உள்ள உரிமை.

(தொடரும்...)

பெலேந்த ரஜமகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாது கோபுரம், நூல் நிலையம் மற்றும் சமய உரை மண்டபம் ஆகியவற்றை மகாசங்கத்தினரிடம் கையளிக்கும் புண்ணிய நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி, முதலில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து நினைவுப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.(ஜ)

இயற்கை சக்தியால் இயங்கும் வீட்டு மாதிரியை உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

குறைந்த வருமானம்கொண்ட குடும்பங்களுக்கு இயற்கை சக்தியால் சுயமாக இயங்கும் வீட்டு மாதிரியை அறிமுகப்படுத்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கையின் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் கையெழுத்திட்டது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சாலிய மெத்திவ் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கே.கே.சி.கே. பெரேரா ஆகியோருக்கிடையில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வானது கடந்த திங்கட்கிழமை மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அதிகபட்ச இயற்கை ஒளி கிடைக்கின்றது. இந்த ஒளியை சேமிக்கும் அதேநேரம்

வீட்டுப் பாவனைக்கு அதனைப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வீட்டுக்கான சிறந்த கட்டடக் கலை அமைப்பதன் மூலமாக இலவசமாகக் கிடைக்கும் சூரிய ஒளியைக் கொண்டு வீடொன்றின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. "சக்தி வளங்களின் பாதுகாப்பு, சேமிப்பு என்பது, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்யவும், மின் மற்றும் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக கடந்த ஆண்டுகளில் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அதன் ஒரு கட்டமாகவே இத்தகைய ஒரு திட்டத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோமென" இலங்கை பொதுப் பயன்பாடுகள் தலைவர் சாலிய மெத்திவ் தெரிவித்தார்.(ஜ)

2 ஆவது நாளாக தொடரும் போராட்டம் கொழும்பில் தபால்சேவை பாதிப்பு

(கொழும்பு)

மத்திய தபால் சேவை ஊழியர்கள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினால் கொழும்பில் தபால் பரிமாற்றம் செய்யும் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்ட குறித்த அடையாள வேலைநிறுத்தம் நேற்றும் தொடர்ந்தது.

மேலும், சம்பளம் உள்ளிட்ட தங்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிடின், தொடர்ந்து வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அந்த சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை மலையக தபால் சேவைகள் வழமை போல இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ)

தாக்குதல் தொடர்பான விசாரணை ஒரு மாதத்தில் நிறைவுக்கு வரும்

பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற் கொள்ளும் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அடுத்த ஒரு மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், "புலனாய்வு அதிகாரிகளின் புகைப்படங்களை வெளியிடா மல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பயங்கரவாத தாக்குதல்களுக்கு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் புல னாய்வு அதிகாரிகள் பொறுப்பு க்கூற வேண்டியவர்கள் என்றால் அது தொடர்பாக பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

தொடர்ந்தும் தெரிவுக்குழு வின் நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டு வரும் நிலையில், சாட்சியங்களை பெற்றுக் கொள் வதற்காக பிரதமர், ஜனாதிபதி மற்றும் சட்ட ஒழுங்கு அமை ச்சின் முன்னாள் அமைச்சர்க ளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது. அத்துடன், இவர்களின் சாட் சிகள் மிகவும் பெறுமதியானவை.

சாட்சியமளித்த பின்னர் மீண் டும் தெரிவுக்குழுவுக்கு சிலர் அழைக்கப்படுவார்கள். எவ்வா றாயினும் மக்களுக்கு உண்மை யினை அறிந்துகொள்ளும் அவசி யம் உள்ளது.

மேலும் தாக்குதல் சம்பவத்தி ற்கு பொறுப்புக்கூற வேண்டியவர் கள் யார் என்பது தொடர்பாக வெளி ப்படுத்த முடியும்" என சரத் பொன் சேகா மேலும் தெரிவித்தார். (ஜ)

மினிபஸ் - பாரவூர்தி மோதல் ஒருவர் பலி; 16 பேர் படுகாயம்

(கொழும்பு)

அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதியில் ஸ்வாவஸ் திபுரப் பகுதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானதுடன் 16 பேர் படுகாய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இரு குழந்தைகள், 12 பெண்கள் மற் றும் இரு ஆண்கள் உள்ளடங் குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினிபஸ் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதி விபத்துக்குள் ளாகியதாலேயே இவ் விபத்து சம்பவித்துள்ளது. (ஜ)

குளியாப்பிட்டியில் 35 வீடுகளை கொண்ட வீடமைப்பு கிராமம்

(கொழும்பு)

குளியாப்பிட்டி தொகுதியின் விஹல்பொல, மானாவையில் வசதி குறைந்த வறிய குடும்பங் களின் நன்மை கருதி வீடமைப் புத் திட்டமொன்று நிர்மாணிக்கப் படவுள்ளது.

கல்வி அமைச்சரும், குளி யாப்பிட்டி தொகுதி அமைப்பாள ருமான அகிலவிராஜ் காரிய வசத்தின் ஆலோசனையின் பேரில் வீடமைப்பு நிர்மாணத் துற்ற அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மானாவை, தள்ளியத்த ஆகிய பிரதேசங்க ளில் 35 வீடுகள் நிர்மாணிக் கப்படவுள்ளன. ஒவ்வொரு வீட்டு க்கும் தலா ஐந்து இலட்சம் ரூபா செலவிடப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்கு மேலதிகமாக வீடமைப்பு கடன் திட்டம் ஒன்றும் இங்கு நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. வறிய குடும்பங்களைச் சேர்ந்த மேலும் முப்பது குடும் பங்களுக்கு வீடமைப்பு கடனாக தலா நான்கு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளன. பிரஸ்தாப வீடமைப்பு திட்ட நடவடிக்கைகள் அடுத்து வரும் ஆறு மாத காலத் திற்குள் நிறைவு செய்யப்பட வுள்ளதாகவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

facebook (f) ::பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1780

Search for people, places and things

அகிலன்

எல்.கே.ஜி. படிக்க எவ்வளவு பீஸ் கட் டணும் என்று கேட்டதுமே எங்கப்பா சாமியாரா போயிடுன்னு சொல்லிட் டாங்க அதான் கிளம்பிட்டன்

பாஸ்கர்

எல்லோரையும் நம்புங்க... துரோகம் பழகிடும்... யாரையுமே கண்டுக்காதீங்க... தன்னம்பிக்கை வந்திடும்



சேத்தன்

பக்கத்து வீட்டுக்காரன் செத்தா அவன் பேய்... நம்ம வீட்டில யாராவது செத்தா அவங்க சாமி என்னடா நியாயம் இது...

டிலான்

இதையெல்லாம் கடந்து வந்தாச்சு... இனி நாமே போனாலும் இப்படியொரு இடமும் அதே குழந்தைத்தனமும் இருப்பது கஷ்டம்

எழிலன்

வாழ்க்கையில் வருவது இரண்டு
வருவதும் போவதும் இன்பமும் துன்பமும்
வந்தால் போகாதது புகழும் பழியும்
போனால் வராதது மானமும் உயிரும்
தானாக வருவது இளமையும் முதுமையும்
நம்முடன் வருவது பாவமும் புண்ணியமும்
அடக்க முடியாதது ஆசையும் துக்கமும்
தவிர்க்க முடியாதது பசியும் பந்தமும்
நம்மால் பிரிக்க முடியாதது பந்தமும் பாசமும்
அழிவைத் தருவது பொறாமையும் கோபமும்
எல்லோருக்கும் சமமானது பிறப்பும் இறப்பும்

பர்வேஸ்

பணத்திடம் ஒரு மனிதன் கூறினான் நீ ஒரு வெற்றுத்தாள் என! பணம் சிரித்துக்கொண்டே கூறியதாம் ஆனால் என் வாழ்க்கையில் இதுவரை நான் குப்பைத் தொட்டியைப் பார்த்தது இல்லை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

புதியதாக வந்த நட்பும் உதவியும்



ஒரு ஊரில் ஒரு விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அந்த நாய் நல்ல பலசாலியாகவும் புத்திசாலியாகவும் இருந்தது. அந்த விவசாயிடம் ஏராளமான மாடுகள் இருந்தன. அந்த மாடுகளை அந்த நாயுடன் தினமும் மேய்ச்சலுக்கு விவசாயி கூட்டிச் செல்வார். தினமும் காலையில் கிளம்பி அருகில் உள்ள மலைக்காடுகளுக்கு அழைத்துச் சென்று மாடுகளை மேய விட்டுவிட்டும் மாலையில் வீட்டுக்கு கூட்டி வருவார். விவசாயி மாடுகளின் பின்னால் நடந்து வர, நாய் இரு பக்கமும் மாறி, மாறிச் சென்று கட்டுக் கோப்பாக காட்டுக்கு கூட்டிச் செல்லும். இவ்வாறு தினம் தினம் சென்று வருவதை நரி ஒன்று கவனித்து வந்தது.

நரிக்கு மிகவும் வயதாகி விட்டது. அதனால் ஓடி ஆடி வேட்டையாட முடியவில்லை.

இந்த மாடுகளைப் பார்த்தும் அதற்கு எச்சில் ஊறியது. ஆனால் நாயை பார்க்கவும் பயமாக இருந்தது. நாயும் நல்ல உயரத்துடன் பலசாலியாக இருந்தது. நரி எப்படியாவது மாட்டை வேட்டையாட சமயம் பார்த்துக்கொண்டிருந்தது.

அந்த மலைக்காடுகளில் வாழ்ந்து வந்த புலி ஒன்றுக்கு நரியைப்போலவே வயதாகி விட்டதால், முன்னைப்போல காட்டில் வேட்டையாட முடியவில்லை. காட்டைவிட்டுவெளியே வந்து மனிதர்கள் வளர்த்து வரும் விலங்குகளை வேட்டையாடலாம் என்று கருதி வந்தது. அப்படி வரும்பொழுது இந்த வயதான நரியை பார்த்தது. நரியாருக்கு ஒரு துணை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் மெல்ல புலியிடம் வந்து புலி யண்ணா சௌக்கியமா? என்று கேட்டது. சந்தோசத்துக்கு என்ன குறைச்சல்! என்று பதில் சொன்னது புலி. என்ன புலியண்ணா ரொம்ப வருத்தமா பேசறீங்க என்று நரியார் கேட்க, எனக்கு வயசானதால முன்பு மாதிரி வேட்டையாட முடியல்ல, அதுதான் இந்த மனுசங்க வளர்க்கிற ஏதாவது கிடைக்குமான்னு தேடி வந்தேன் என்றது. நரிக்கு உடனே ஒரு திட்டம் தோன்றியது.

நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன், நீங்க மட்டும் சரின்னு சொன்னா நமக்கு நல்ல வேட்டை கிடைக்கும், நீங்க பாதி நான் பாதி எடுத்துக்கலாம், என்ன சொல்றீங்க? என்று கேட்டது நரி. புலிக்கு கோபம் வந்துவிட்டது, நீ எனக்கு சமமா பாதி கேட்கிறியே, அப்படீன்னா இந்த திட்டமே வேண்டாம் என்று சொல்லி விட்டது. நரிக்கு அடடா அவசரப்பட்டிட்டோமே, என்று நினைத்து, அப்படி எல்லாம் வேண்டாம். நீங்க சாப்பிட்டது போக மிச்சம் கொடுத்தா போதும் என்று சொல்லி புலியை சந்தோசப்படுத்தியது. புலியும் ஒத்துக்கொண்டது.

நரியின் திட்டப்படி, அந்த காட்டில் ஒரு பெரிய குழி ஒன்று இருந்தது. அந்த குழியை அங்குள்ள இலை தழைகளைக் கொண்டு மூடி விட்டது. ஒரு பெரிய மரக்கிளையை இழுத்து வந்து பக்கத்தில் வைத்துக் கொண்டது. மறுநாள் மாடுகள் வருவதை மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தது. வழக்கம்போல மாடுகள் ஒவ்வொரு இடமாக மேய ஆரம்பித்தன. ஒளிந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த நரி அந்த நாயின் கண் படாத தொலைவு ஒரு மாடு மேய்ந்து கொண்டு வருவதை கவனித்து மெல்ல அருகில் வந்து நண்பா இந்த காய்ந்த புல்களைத்தான் தினமும் மேய்கிறாயா? என்று கேட்டது. கேட்டது யார் என நிமிர்ந்து பார்த்த மாடு, நரியிடம் என்ன செய்வது இந்த இடங்களில் புற்கள் காய்ந்து விட்டன. தள்ளி போய் மேயலாம் என்றால் இந்த நாய் விடுவதில்லை, இப்பொழுது கூட உன்னிடம் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தால் பாய்ந்து வந்து விடும், அது இந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் மேய்ந்தால் ஆபத்து வரும் என்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று அலுத்துக்கொண்டது.

நீ மட்டும் சரி என்று சொன்னால் இதைவிட அழகான பச்சைப்பசேல்என்ற புல்வெளியை காட்டுகிறேன்என்றது, ஐயையோ, நாயார் என்னை விடமாட்டாரே என்று மாடு சொன்னது. அதைப் பற்றி கவலைப்படாதே, நாளை இதேபோல் வா, வந்தவுடன் எல்லோரையும் போல மேய்ந்து கொண்டே இந்த இடத்துக்கு வா, உன்னை அங்கு அழைத்துப்போகிறேன், உனக்கு வேண்டியதை மேய்ந்துவிட்டு மாலைக்குள் இங்கு வந்து விடு என்றது. மாட்டுக்கு ஒரே மகிழ்ச்சி, நாளை பசும்புல் சாப்பிடப்போகிறேன் என்று நினைத்தது.

அன்று மாலையே நரி புலியிடம் போய் நீங்கள் அந்த குழியில் ஒளிந்து கொள்ளுங்கள், அந்த குழியினை இலைதழைகளால் மூடி விடுகிறேன், நாளை அந்த மாட்டை அழைத்து வருகிறேன். அது குழியில் விழுந்தவுடன் நீங்கள் அடித்து சாப்பிட்டு விட்டு மேலே வர இந்த மரக் கிளையை போடுகிறேன். அதில் ஏறி வந்து விடுங்கள், நான் இந்த மரக்கிளையில் இறங்கி உள்ளே சென்று மிச்சத்தை சாப்பிட்டுவிட்டு இதே மரக்கிளை வழியாக மேலே வந்து விடு கிறேன் என்று சொல்லியது. புலியும் அந்த மரக்கிளை வழியாக குழியில் போய் படுத்துக் கொண்டது. நரி மரக்கிளையை வெளியே எடுத்து விட்டு முதலில் இருந்தது போல் இலை தழைகளால் மூடி விட்டது.

மறுநாள் வழக்கம்போல விவசாயியும் நாயுடன் மாடுகளை அழைத்துச் சென்றார். அப்படி செல்லும் பொழுது எப்பொழுதும் போல் இல்லாமல் இந்த மாடு மட்டும் ஒதுங்கிப் போவதையும் அதேநேரத்தில் வித்தியாசமாகவும் நடந்து கொள்வதை நாய் கவனித்தது. தன்னுடைய கண் பார்வையை இதன் மீது வைக்க ஆரம்பித்தது.

வழக்கம்போல அவைகள் மேயும் இடத்திற்கு சென்றவுடன், இந்த மாடு மட்டும் ஒதுங்கி மறைவதை பார்த்த நாய் மெல்ல அதற்கு தெரியாமல் என்ன செய்கிறது என பார்த்தது. அந்த மாடு மெல்ல ஒதுங்கி மேய்வது போல காண்பித்தது, அப்பொழுது பதுங்கி வந்த நரி இந்த மாட்டை சைகை காட்டி அழைத்து கூட்டி செல்ல ஆரம்பித்தது. நரியுடன் மாடும் செல்ல ஆரம்பித்தது. பின் தொடர்ந்த நாய், நரி ஏதோ சதி செய்து அழைத்து செல்கிறது என்பதை புரிந்து கொண்டது. சிறிது தூரத்தில் ஒரு பெரும் குழி இருப்பது அதற்கு ஞாபகம் வந்தது. உடனே ஒரு முடிவு எடுத்து நரியின் மீது பாய்ந்தது, திடீரென்று பாய்ந்த நாயை கண்டவுடன் தலை தெறிக்க ஓட ஆரம்பிக்க நாய் வேண்டுமென்றே அந்த குழியை நோக்கியே விரட்ட ஆரம்பித்தது. நாயிற்கு பயந்து ஓடிக் கொண்டிருந்த நரிக்கு உயிர் பயத்தில் குழியை மறந்து விட்டது.

அந்த குழியினுள் காலை வைக்க உள்ளே விழுந்தது. ஒரே அடியில் கொன்றுவிட வேண்டும் என்று காத்திருந்த புலி ஓங்கி அடிக்க பரிதாபமாய் உயிரை விட்டது நரி. அடித்த பின்தான் கவனித்தது புலி, ஐயையோ நரியைக் கொன்று விட்டோமே என மேலே பார்க்க அங்கே நாயும், பக்கத்தில் நரியை நம்பி வந்த மாடும் நின்று கொண்டிருந்தன. பார்த்து என்ன செய்ய? மேலே வர, மரக்கிளையை போட்டால் தானே வர முடியும். மேலே வர முடியாமல் சுற்றி சுற்றி வர ஆரம்பித்தது.

நாய், மாட்டிடம் பார்த்தாயா, புதிதாக ஒருவன் வந்து உதவி செய்கிறேன் என்று சொன்னால் அதில் உள்ள ஆபத்துக்களை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றது. மாடும் உண்மையை உணர்ந்து நாயிடம் மன்னிப்புக் கேட்டது.

விடுகதைகளும் விடைகளும்

• ஒளியில் நம்கூடவே இருப்பான், இருளில் மறைந்து கொள்வான். அவன் யார்?

நிழல்

• அவன் பற்களை அழுத்தினால் பல பேர் ரசிக்கும் இசை ஒலிக்கும். அவன் யார்?

ஹார்மோனியப் பெட்டி

• பகலில் இருபுறம் நின்று காவல் காப்பான், இரவில் நடுவிலே நின்று காவல் காப்பான். அவன் யார்?

இரட்டை கதவு

• புச்சைப் பெட்டியில் பத்துச்சரம் முத்துகள். அது என்ன?

வெண்டைக்காய்

• பட்ட மரம் இசை எழுப்ப படைகள் திரண்டு வரும். அது என்ன?

முரசு

நற்சிந்தனைகள்

• அச்சத்தினால் ஒத்திப் போடும் பழக்கமே உங்கள் பகைவனாகும். அதை நிர்மூலம் செய்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

• வாழ்க்கையில் சின்னச் சின்ன விடயங்கள் கூட பெரிய பெரிய சந்தோசத்தை அள்ளித்தரக் கூடியவை. அன்றாட வாழ்வில் சின்னச்சின்ன விடயங்களை முடிப்பதன் மூலம் பெரிய சந்தோசத்தை அனுபவிக்க முடியும்.

• நமது மனோ நிலையில் பொதிந்துள்ள ஆற்றல்தான் முடிவைத் தீர்மானிக்கப் போகிறது. ஆக்கபூர்வமான எதிர் பார்ப்பை தெரிவு செய்யுங்கள்! வெற்றியை எதிர் பாருங்கள். ஆனால் வெற்றி நாளை வருமென்று மனதிற்கு தகவல் கொடுக்காதீர்கள். வெற்றி இதோ இதைப்படிக்க வந்திருக்கிறீர்களே இக்கணம்தான் வெற்றி.

ஊடகங்கள் நீதிமன்றங்களாக செயற்பட்டால் ஜனநாயக நாட்டில் நிலைமைகள் மோசமாக அமையும்

எரான் எச்சரிக்கை

(கொழும்பு)

ஊடகங்கள் நீதிமன்றங்களாக செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டால் ஜனநாயக நாட்டில் நிலைமைகள் மோசமாக அமையும் என நிதி இராஜாங்க அமைச்சர் எரான் எச்சரிக்கை விடுத்தார்.

சர்ச்சைக்குரிய குருநாகல் வைத்தியர் மொஹமட் ஷாபி உண்மையில் குற்றமிழைத்திருந்தால் நீதிமன்றத்தின் மூலம் அவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கத்துக்கு மாற்றுக்கருத்து கிடையாது. எனினும் ஊடகத்தின் தீர்ப்பின்றி முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை பாதிக்கப்பட்ட பெண்கள் விஞ்ஞான ரீதியாகத் தம்மை பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் கொழும்பு காசல் வைத்தியசாலை உட்பட இரண்டு வைத்தியசாலைகளில் மேற்கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் அங்கு பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். உண்மை நிலையை அறிந்து கொள்ளவே அரசாங்கமும் எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எல்லாக்காலத்திலும் ஊடகங்கள் வழங்கும் தீர்ப்பை மக்கள் ஏற்கும் நிலையே உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், அது தனிப்பட்ட மனிதர்களின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தெளிவுடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது, நாட்டில் ஊடகங்களே நீதிமன்றங்களாகியுள்ளன, தீர்ப்பையும் வழங்குகின்றன. எனினும் தவறு நிரூபிக்கப்படாமல் தீர்ப்பளிப்பது நல்லதல்ல.

வைத்தியர் ஷாபி தொடர்பில் தினமும் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஊடகங்கள் கூறுகின்றன.

இந்நாட்களில் சம்பந்தப்பட்ட சில பெண்கள் தாம் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே முறைப்பாடுகளை முன் வைத்துள்ளதாக தெரிவித்து வருகின்றனர்.

இதை ஊடகங்களில் பார்த்து நாம் எந்த முடிவுக்கும் வருவது தவறு என மேலும் தெரிவித்தார். (ஜ)

அவன்கார்ட் வழக்கில்

கைது செய்யப்படுவதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரிய கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

அவன்கார்ட் வழக்கில் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையை நேற்று புதன்கிழமை கொழும்பு கோட்டை நீதவான் நிராகரித்திருந்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் அக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் டில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்கவினால் கொழும்பு நீதவான் நிதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதகளஞ்சியத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காரணமாக அரசாங்கத்திற்கு 1,140 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்க, இந்த சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் தேசிய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களில் ஒருவராக கடமையாற்றியிருந்தார்.

இந்நிலையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்கவை குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்யக்கூடும் என்ற தகவல்களும் அண்மையில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

நாட்டின் 9 மாகாணங்களிலும் வரட்சி 5 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் 9 மாகாணங்களிலும் நிலவும் வரட்சி காரணமாக 5 இலட்சத்து 67 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, புத்தளம், குருநாகல், வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாத்தளை, கண்டி, அம்பாந்தோட்டை, பொலநறுவை, அநுராதபுரம், அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 1,59,123 குடும்பங்களைச் சேர்ந்த 5,67,662 பேரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் நேற்றையதினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் இந்த அனர்த்தம் காரணமாக சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணத்தில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 272 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஜ)

இலங்கை சாரணர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவில் இடம்பெறும் உலக சாரணர் ஜம்போரியில் பங்குபற்றும் இலங்கை சாரணர் அணிக்கு உத்தியோகபூர்வமாக தேசியக் கொடியை கையளிக்கும் நிகழ்வு இலங்கையின் தலைமை சாரணரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது சாரணர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி இலங்கையின் தனித்துவத்தை உலகிற்கு கொண்டு செல்வதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சாரணர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி பாடசாலைக் காலத்தில் தான் ஒரு சாரணராக செயற்பட்டு பெற்றுக் கொண்ட அனுபவங்களை நினைவுகூர்ந்ததுடன் அதில் பெற்ற அனுபவங்கள் ஜனாதிபதி பதவியை வகிப்பதற்கும் தனக்கு பெரிதும் உதவியதாக தெரிவித்தார்.

24 ஆவது உலக சாரணர் ஜம்போரி எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியாவில் நடைபெறுவதுடன் இதில் இலங்கை சாரணர் இயக்கத்தின் சார்பில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

இரத்தினக்கல் அகழ்ந்த மூன்று பேர் கைது

(பொஹவந்தலா)

பொஹவந்தலாவ - தெரேஷியா தோட்டப் பிரதேசத்தில் கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 35 மற்றும் 47 வயதிற்குட்டவர்கள் என்பதுடன் பலாங்கொடை, பின்னவலை மற்றும் பொஹவந்தலாவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

ஒவ்வொரு அநீதியையும் கண்டு ஆத்திரத்தில் அதிர்ந்து போவாயானால்,நீ எனது தோழன்

– சேகுவேரா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

கொடும் செயல் செய்து பரிநாசம் தேடாதீர்

திருகோணமலை கன்னியாவில் அத்துமீறி புத்தர் சிலையை நிறுவுகின்ற செயலைக் கண்டித்து ஆன்மிக வழியில் எதிர்ப்புத் தெரிவித்த தென்கயிலை ஆதீன சுவாமிகள் மீது சுடுநீர் ஊற்றிய கொடும் செயல் சிங்களப் பேரினவாதத்தின் மிலேச்சத்தனம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

கன்னியா வெந்நீரூற்று என்ற புனித தீர்த்தப்பகுதி இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனால் அமைக்கப்பட்டது என்பதை வரலாறுகள் நிரூபித்து நிற்கின்றன.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் கிரியைகளைச் செய்யும் பொருட்டு அமைத்த கன்னியா வெந்நீரூற்று இலங்கையின் ஆதிச் சமயம் சைவ சமயம் என்பதையும் இலங்கை முழுமையும் சிவ வழிபாடு இடம்பெற்றிருந்ததென்பதையும் சான்றுப்படுத்துகிறது.

இந்நிலையில் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் ஆதி தொடக்கம் இருந்த பிள்ளையார் ஆலயத்தை அழித்து விட்டு, அதில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்கின்ற அடாவடித்தனம் நடந்து வருகிறது.

இவ்வாறு புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்துவிட்டு கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் ஆதி தொடக்கம் புத்தர் இருக்கிறார் என்று வரலாற்றைத் திரிபுபடுத்துகின்ற மிகப் பெரும் கொடுமை நடந்து வருகிறது.

இந்தக் கொடுஞ்செயலைக் கண்டித்து ஆன்மிக வழியில் தென்கயிலை ஆதீன சுவாமிகளின் தலைமையில் சைவ மக்கள் மேற்கொண்ட ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தியது மட்டுமன்றி தென்கயிலை ஆதீன சுவாமிகள் மீது சுடுநீர் ஊற்றிய கொடும் செயலையும் சிங்களப் பேரினவாதிகள் சிலர் செய்திருக்கின்றனர்.

பௌத்த பிக்குகளை, பௌத்தபீடங்களை மதிக்க வேண்டும் என்று கூறுகின்ற சிங்களத் தரப்புக்கள் சைவ ஆதீன சுவாமிகள் மீது சுடுநீர் ஊற்றுகிறது என்றால், இந்த இழி செயலைத்தான் பௌத்தம் போதிக்கிறதா? என எண்ணத் தோன்றும்.

எது எவ்வாறாயினும் இலங்கையில் சைவ சமயத்தை வேரறுக்க மும்முனைத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இதில் கன்னியா, முல்லைத்தீவு, மன்னார் என்பன வெறும் அடையாளங்களே.

இவ்வாறு சைவ சமயத்தை வேரறுக்கின்ற மும்முனைத் தாக்குதலுக்குப் பின்னால்; ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் பணப்பரிமாற்றங்களும் நடந்தாகிறதா? என்ற கோணத்தில் இச்சம்பவங்களைப் பார்க்க வேண்டும்.

ஏப்ரல் 21ஆம் திகதி ஐ.எஸ்.ஐ.எஸ் முஸ்லிம் தீவிரவாதத் தாக்குதல் நடத்தியது என்று கூறிக்கொண்டு, சைவ சமயத்தை அழிக்க முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பலத்த சந்தேகத்தைத் தருகின்றன.

தவிர, சைவ சமயத்தின் மீதான தாக்குதல் மற்றும் ஆக்கிரமிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய் திறக்காமல் இருப்பதன் பின்னணியில் சைவ சமயத்தை அழிப்பதற்கு கூட்டமைப்பின் தலைமையும் உடன்பட்டு விட்டதா? என்று சந்தேகிப்பதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன்; பிறவாயாக்கைப் பெரியோனாக நின்று உருத்திரதாண்டவம் ஆடும் கூத்தில், அதர்மத்தவர்கள் அழிக்கப்பட்டு அறம் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை இம்மியும் பிசகாது என்பது சத்தியம்

தமது திறன்களால் உலகை வெல்வதற்கு இளைஞர்,யுவதிகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்

–ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

உலகில் எந்தவொரு நாட்டிற்கும் பின்னடையாத எமது தேசத்திற்கே உரிய தனித்துவமான புராதன தொழிநுட்ப முறைகள் மற்றும் அறிவு ஆகியவற்றை பாதுகாக்கும் அதேவேளை, எதிர்காலத்திலும் தமது திறமையினாலும் திறன்களாலும் உலகை வெற்றி கொள்வதற்கு இளைஞர், யுவதிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் இதற்கான அனைத்து வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச உலக இளைஞர் திறன் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி , இலங்கையர்களின் விசேட திறமைகளை மேம்படுத்தி தேசத்தின் எதிர்காலத்திற்காக போட்டித் தன்மைமிக்க உலகை வெற்றி கொள்வதற்கு விரிவான சமூக உரையாடலுடன் அனைவரது அர்ப்பணிப்பும் அத்தியாவசியமாகுமெனத் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் பிரேரணைக்கமைய ஐக்கிய நாடுகள் சபையினால் பெயரிடப்பட்ட உலக இளைஞர் திறன் தினம் அவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் அதன் அனைத்து உறுப்பு நாடுகளிலும் ஜூலை மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

"திறன்களின் ஊடாக வெற்றிகரமான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளில் இவ்வருட இளைஞர் திறன் தினம் இலங்கையில் கொண்டாடப்பட்டதுடன், அதனுடன் இணைந்ததாக இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்திக்கான விசேட செயற்திட்டங்கள் பலவும் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பதிற் கடமை அமைச்சர் புத்திக்க பத்திரன, இராஜாங்க அமைச்சர் கருணாரத்ன பரனவிதான ஆகியோரும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக்க உள்ளிட்ட அதிகாரிகளும் இந் நிகழ்வில் பங்குபற்றினர். (ம-3)

ரூ.10 இலட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் பள்ளிக்குடாவில் மீட்பு

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளை மீட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அவற்றை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலர்கள், பூநகரி பள்ளிக்குடா கடற்கரையோரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சோதனை ரோந்து நடவடிக்கையை முன்னெடுத்தனர். அதன்போது சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் அவர்களால் மீட்கப்பட்டன.

அந்த வலைகள் தொடர்பில் கடற்றொழிலாளர் சங்கங்களுடன் பேசப்பட்டது. எனினும் வலைகளுக்கு உரிமை கோர எவரும் முன் வராமையால், அதிகாரிகள் அவற்றை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். (ம-3)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் 4 கிலோ 400 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றப் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா கல்கமுவப் பகுதியிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணச் சுற்றுலா மேற்கொண்ட வவுனியா ஈரப்பெரிய குளம் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் அதிகாரியே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

அத்துடன் மேற்படி கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபரை இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பதில் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (5-10-114)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** மாதகல், காஞ்சிபுரம், குசுமாந்துறை, காட்டுப்புலம், ஜம்புகோளப்பட்டினம், ஜம்புகோளப்பட்டினம் வாடி வீடு, ஆர்க் லேன் உடுவில், அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** ஆனந்தபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், இரணைமடு சந்தி, **NAITA,** கிளிநொச்சி வைத்தியசாலை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், **Wickramaratne pvt LTD, Ware House Complex,** இராணுவ ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** செம்மண்தீவிலிருந்து நானாட்டான் வரை, அளவக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மண் தீவு **Ware House** ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

பௌத்த குருமாருக்கு அபகீர்த்தி ஏற்படுத்திய கருத்து

பிரதமருக்கு விளக்கமளித்த ரஞ்சன்

(கொழும்பு)

பௌத்த மத குருமாருக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில், ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பிரதமர் முன்னிலையில் விளக்கங்களை வழங்கியுள்ளார்.

இதற்கமைய நேற்று பிற்பகல் மூன்று மணியவில் அலரிமாளிகைக்கு வருகை தந்த ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் சுமார் ஒரு மணி நேரம் விளக்கமளித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு பிரதமர் எழுத்து மூலம் ரஞ்சன் ராமநாயக்கவை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

11 இளைஞர்கள் கடத்தல் சந்தேக நபரின் பயணத்தடை தற்காலிகமாக நீக்கம்

(கொழும்பு)

2008,2009 ஆம்ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுகாணாமல்போனமை தொடர்பான வழக்கில் முக்கிய சாட்சியான கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜி.லக்சிரிக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று புதன்கிழமை காலை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது கோட்டை நீதவான் ரங்கா திஸாநாயக்க இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இதேவேளை இந்த வழக்கு தொடர்பாக பாதுகாப்பு படைகளின் பிரதானியும், முன்னாள் கடற்படை தளபதியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் சந்தேக நபரான சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்ற 'நேவி சம்பத்' என்பவருக்கு அடைக்கலம் கொடுத்ததாக ரவீந்திர விஜேகுணவர்தனவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7-9)

சத்திய தரிசனம்

குடும்பப் பொறுப்பு அவசியம்

❖ கல்வியறிவு பெற்ற பெண்கள், நம் தேசத்தின் தர்மத்தை மறந்து விடக் கூடாது. கற்ற கல்வி நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவையும் கொடுப்பதாக இருக்க வேண்டும்.

❖ ஆண்களைப் போல பெண்களும் கல்விகற்பதும், திறமைக்கேற்ப பணிபுரிவதும் தேவையாகி விட்டது. ஆனால், அவர்களுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் கிடைப்பது நல்லதல்ல.

❖ சுலாபா, கார்க்கி, அனுசூயா போன்ற பழங்காலப் பெண்கள் ஆழ்ந்த கல்வியறிவு பெற்றிருந்தாலும், தங்களுடைய குடும்பப் பொறுப்பையும் கைவிட்டு விடவில்லை. இன்றைய பெண்கள் இவர்களைத் தங்களின் வழிகாட்டியாகப் பின்பற்ற வேண்டும்.

❖ நாட்டின் அடிப்படை கட்டமைப்பான ஆன்மிகப் பொக்கிஷத்தைப் பாதுகாக்கும் பெட்டகங்களாக பெண்கள் திகழ வேண்டும்.

❖ எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு தாய்மார்களின் கையில் தான் இருக்கிறது. பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்த்து ஆளாக்க வேண்டியது அவர்களின் கடமை.

கிறாஸ்கொப்பர்ஸ் கிண்ணம் வென்றது ஆக்கிரஷிவ் வோயிஸ்

கிறாஸ்கொப்பர்ஸ் பிறிமீயர் லீக் துடுப் பாட்டத் தொடரில் ஆக்கிரஷிவ் வோயிஸ் அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப் பழை மகாஜனாக்கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜப்னாபன்ரர்ஸ் அணியை எதிர்த்து ஆக்கிரஷிவ் வோயிஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆக்கிரஷிவ் வோயிஸ் அணி களத் தடுப்பை தீர்மானித்தது.

அதற்கமைய, முதலாவது இன்னிங்சிற் காக துடுப்பெடுதாடிய ஜப்னாபன்ரர்ஸ் அணி 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கினை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சஞ்சேயன் 46 ஓட்டங்களையும், வாமானன் 7 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 5 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்து வீச்சில் ஆக்கிரஷிவ் வோயிஸ் அணி சார்பில் டார்வின், ராகுலன் இரு வரும் தலா ஓர் இலக்கினை வீழ்த் தினர்.

63 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆக்கி ரஷிவ் வோயிஸ் அணி 5 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுயந்தன் 37 ஓட்டங்களையும், ஆதித்தன் 19 ஓட்டங்களையும் பெற்றது.

பந்து வீச்சில் ஜப்னாபன்ரர்ஸ் அணி சார்பில் யனுசன் ஓர் இலக்கினை வீழ்த்தினார். (க)

அமரர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி யின் முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்று நர் அமரர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த் தமாக, யாழ்.மாவட்டத்தில் உதைபந் தாட்டத்தில் முன்னணியில் திகழும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை மகாஜனாக் கல்லூரி மைதான த்தில் நடைபெறவுள்ளது.

மகாஜனாக் கல்லூரி நிர்வாகம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங் கமைப்பில் நடைபெறும் இச்சுற்றுப் போட்டி க்கு மகாஜனாக் கல்லூரியின் 1978 சிங்கர் கிண்ண உதைபந்தாட்ட சம்பியன் அணியினர் இவ்வருடத்திற்கு அனுச ரணை வழங்குகின்றனர்.

இச்சுற்றுப்போட்டியில் புனித ஹென்றிய ரசர் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வயா விளான் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகிய எட்டு அணிகள் கலந்து கொள்கின்றன.

விலகல் முறையில் நடைபெறும் இச்சுற்றுப்போட்டியில் முதல்நாள் சனிக் கிழமை காலிறுதியாட்டங்களும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை அரை யிறுதியாட்டங்களும் மாலை இறுதியாட்ட மும் நடைபெறவுள்ளது.

முதல்நாள் காலை 8.00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் புனித ஹென்றிய ரசர் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் நெல்லியடி மத்திய கல்லூரியை எதிர்த்து வயாவிளான் மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மகாஜனாவின் முன்னாள் உதைபந்தாட்ட வீரன் வடிவேஸ்வரன், சிறப்பு விருந்தி னர்களாக மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட வீரன் நா.விஜய ரட்ணசிங்கம், கிங்ஸ்டன் மாநகர கவு ன்சிலர் மகாஜனன் வை.தயாளன் ஆகியோ ரும் கலந்து சிறப்பிக்கின்றனர். (க-105)

வடமாகாண பெண்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி வடமாகாண சம்பியனாது. இறுதிப் போட்டியில் கிளிநொச்சி அணியினை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது யாழ்.அணி. (க)

மேலதிக நான்கு ஓட்டம் வேண்டாம் நடுவரிடம் கூறிய ஸ்ரோக்ஸ்

இங்கிலாந்து-நியூசிலாந்து இடை யேயான உலகக் கோப்பை இறுதிப் போட்டியின் போது இங்கிலாந்து வீரர் ஸ்ரோக்ஸ், நடுவர்களிடம் உறையாடிதை ஜேம்ஸ் ஆண்டர்சன் பகிர்ந்துள்ளார்.

உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் சுப்பர் ஓவரின் போது, கப்தில் வீசிய பந்து ஸ்ரோக்ஸின் துடுப்பில் பட்டு பவுண்டரிக்கு சென்றதால் இங்கிலாந்து அணிக்கு 6 ஓட்டங்கள் வழங்கப்பட்டது. இது தொடர் பாக, ஸ்ரோக்ஸ், நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சனிடம் மன்னி ப்பும் கோரினார்.

இந்நிலையில், இங்கிலாந்து நட்சத்திர பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் அளித்த நேர்காணலில் கூறியதாவது, கிரிக்கெட்டில் ஸ்டம்பை நோக்கி வீசப்படும் பந்து துடுப்பாட்டக்காரர் மீது பட்டு சென்றால், துடுப்பாட்டக்காரர் ஓட்டங்கள் எடுக்கமாட் டார், அது தான் கிரிக்கெட்டின் பண்பு.

ஆனால், பந்து துடுப்பாட்டக்காரர் மீது பட்டு பவுண்டரி சென்றால், அது விதிப்படி பவுண்டரி தான், நம்மால் ஒன்றும் செய்ய

முடியாது.

போட்டிக்கு பின்னர் பென் ஸ்ரோக்ஸை சந்தித்த மைக்கேல் வாகனுடன் பேசும் போது, பென் ஸ்ரோக்ஸ் உண்மையில் நடுவர்களிடம் சென்று அந்த நான்கு ஓட்டங்கள் எங்களுக்கு தேவையில்லை. அதை நீங்கள் நீக்க முடியுமா? என கோரியதாக தெரிவித்துள்ளார்.

எனினும், ஐசிசி-யின் விதியில் உள்ள தால், அதை மாற்ற முடியாது என நடுவர் கள் கூறியதாக ஜேம்ஸ் ஆண்டர்சன் தெரிவித்துள்ளார். (க)

உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் முடிவை எப்படி தீர்மானித்திருக்கலாம் - டெண்டுல்கர்

இங்கிலாந்தில் நடந்த உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் வெற்றியை தீர்மானி க்க, இன்னும் ஒரு சுப்பர் ஓவர் வைத்தி ருக்கலாம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

2019 உலகக்கோப்பையை இங்கி லாந்து அணி வென்ற பின்னர் கொண் டாட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், பவுண்டரிகள் மூலம் எப்படி வெற்றியை தீர்மானிக்கலாம் என்ற விமர்சனங்கள் இன்னும் குறையவில்லை.

ஐ.சி.சி. தனது விதிமுறைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித் தனர். இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், உலகக்கோப்பை இறுதிப்போட்டி குறித்து கருத்துத் தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், 'இன்னும் ஒரு சுப்பர் ஓவர் வைத்திருக் கலாம் என்றே எனக்கும் தோன்றியது. பவுண்டரிகள் வைத்து வெற்றியாளர் களைத் தீர்மானிப்பதைக் காட்டிலும் அதுதான் சரியானதாக இருந்திருக்கும்.

இதை உலகக்கோப்பை இறுதிப்போட்டி என்பதால் மட்டுமே கூறவில்லை. எல்லாப் போட்டிகளுமே முக்கியமான போட்டிகள் தான்' எனத் தெரிவித்துள்ளார். மேலும், உலகக்கோப்பை போன்ற பெரிய தொடர்களில் நொக்-அவுட் சுற்றுகளில் மாற்றம் வேண்டுமா? என்ற கேள்வி அவரால் முன்வைக்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த சச்சின், 'நிச்சயமாக மாற்றம் தேவை என்று நினைக்கிறேன். டாப் அணிகளுக்கு நிச்சயம் ஏதாவது வாய்ப்பு அளிக்க வேண்டும். காரணம் தொடர் முழுவதும் நிலையான ஆட்டத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருப்பார்கள்' என தெரிவித்துள்ளார். (க)

பாணின் விலை...

மையரளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோதுமை மா ஒரு கிலோ 8 ரூபாயால் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று நள்ளிரவிலிருந்து பாணின் விலை அதிகரிக் கப்பட்டது. (ம-10)

ரணிலின் கருத்...

விக்கும்போதே சித்தார்த்தன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் நியாயமான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படு மென பலர் நினைத்தார்கள். அதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் கூட செய்யப்பட்டிருந்தது. புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கு வதற்காக அரசியல் நிர்ணய பேரவை அமைக்கப்பட்டு அதற்குள் 4, 5 குழுக்கள் இருந்தன. அதில் ஒன்றில் தலைவராக கூட இருந்தேன்.

இவ்வாறு பல முயற்சிகள் எடுக்கப்பட் டிருந்த காலத்தில் கூட எங்களை பொறுத்த வரை நியாயமான தீர்வுகள் எட்டப்படாவிட் டாலும் அவைகளின் முழுமையான பங் களிப்பை வழங்கினோம். எங்களால் முடிந் தளவு ஒரு நியாயமான அறிக்கையை எம் முடைய குழுவுடன் இணைந்து வழங்கி னோம். இவ்வாறான விடயங்கள் நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சர்வதேச அழுத்தங்களினால், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை யினால் கொண்டுவரப்பட்ட நடவடிக்கை களாக இருக்கின்றமையினால் நியாயமான தீர்வு கிடைக்குமென எல்லோரும் எதிர் பார்த்தார்கள். எனினும் வழமைபோன்று குறித்த நடவடிக்கைகளெல்லாம் தற்போது கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்னும் 2 வருடங் களிலேயே தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும். ஆனால் இந்த அரசாங்கத்தினால் அல்ல என பிரதமர் கூட அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறினார்.

அதாவது எதிர்வரும் அரசாங்கத்தினா லேயே தீர்வு கிடைக்குமென்பதையே பிரத மரின் இந்த கருத்தின் ஊடாக வலியுறுத் தியுள்ளார். ஆகவே இனியும் தீர்வு கிடைக்கு மென எதிர்ப்பார்ப்பது ஏற்புடையதல்ல" என சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (ம-250)

கி.பி 13ம் நூற்றா...

களுடன் கூடிய இந்து ஆலயம் கண்டு பிடிக்கப்பட்டது

இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேச பற்றியும் அவ்விடத்தின் முக்கியத்துவம் பற்றியும் பாளி, சிங்கள இலக்கியத்தில் வரும் "குருந்தி" என்ற இடமே இதுவாக இருக்கலாம் என பேராசிரியரால் கூறப்பட்டது "சாவ கனுக்கும்" இவ்விடத்திற்கும் தொடர்புள்ள தாக கூறப்பட்டுள்ளது

சுதை மற்றும் செங்கற்களால் ஆன இவ்வாலயத்தில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், அந்தராளம், பலிபீடம் ஆகியன வும் சுவர்களில் தூண்களும் காணப்படு கின்றது. (ம-285)

அனைத்து தமிழ்...

இடம்பெறவுள்ளது.

அமைச்சர் மனோ கணேசன் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார்.

கன்னியா, நீராவியடி, நுவரெலியா கந்தப்பளை உள்ளிட்ட இடங்களில் மதப்பதற் றம் தோற்றுவிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழர்களின் பாரம்பரிய இடங்களின் பாது காப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இந்த சந்திப்பிற்கு அமைச்சர் மனோ கணே சன் ஏற்பாடு செய்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தமிழ் தரப்பிற்கும் இந்த கூட்டத் திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

ஜனாபதிபதி வேட்...

ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கொழும்பில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற இடது சாரிக்கட்சிகளின் தலைவர்களின் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதாகவும் தனது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக்காலத்தில் தமிழ் மக் களுக்காக தற்போதுள்ள அரசாங்கம் செய் திராத பல அபிவிருத்தித் திட்டங்களை செய்து முடித்ததாகத் தெரிவித்தார்.

ஆனாலும் தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வே வேண்டும் என பவ்வேறு கோரிக்கைகள் முன்வைக்கும் நிலையில் எதிர்வரும் (2020) ஜனாதிபதித் தேர்தலில் எமது வேட்பாளர் வெற்றி பெற்றதும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் எனக்கூறி தமிழ் மக்களின் வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறிய இவ் அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத் தையும், பாதுகாப்பையும் கேள்விக்குறி யாக்கியுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி வேட்பாளர் தொட ர்பில் கோத்தா, சமல், பசில் ஆகியவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் இடதுசாரிகள் குறிப்பிடும் சமல் ராஜபக்ஷ மற்றும் தினேஸ் குணவர்தன ஆகியவர்கள் தொடர்பில் கட்சிகளுக்கிடையே கலந்து ரையாடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி பொதுஜன முன்னணியினரின் மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அறிவிக் கப்படும் என மேலும் தெரிவித்தார். (ம-3,10)

அமைச்சரவை...

மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற ஊட க வியலாளர் சந்திப்பின்போது அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் விற்பனையாளர் களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்து வதே இதன் முக்கிய நோக்கம் என்றும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் மரண தண்டனை தொடர்பான இந்த முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரும் தொடர்ந்தும் எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றனர்.

மேலும், மரண தண்டனையை நிறை வேற்றுவதை எதிர்வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறு உச்ச நீதி மன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப் பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

5ஆவது நாளாக...

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதி ஒருவர் இன்று 5 ஆவது நாளாக உணவு ஒறுப்பு போராட் டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அடிப்படை வசதிகளும் இல்லாத தண் டனை சிறையில் அடைக்கப்பட்டுள்ள இவர் உடல்நிலை மோசமடைந்த நிலையில் உள்ளார்.

நெல்லியடி கரவெட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான முன்னாள் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் கனகசபை தேவதாசன் (வயது 62) என்பவரே மேற்படி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்

கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு ரயில் நிலைய குண்டுத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட குறித்த நபருக்கு கொழும்பு மேல்நீதிமன்றில் இரு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

குறித்த இரு வழக்குகளிலும் இவருக்கு ஆதரவாக எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகவில்லை. சட்டத்தரணியை வைத்து வழக்கை வாதாடுமளவுக்கு அவரிடம் வசதியும் இருக்கவில்லை இதனால் தனக்கு தானே வழக்கை வாதாட முடியும் என்பதால் தானே இருவழக்குகளையும் வாதாடினார்.

ஆனால் அவருக்கு சார்பான ஆதாரங் களையும், சாட்சிகளையும் திரட்ட முடியாத தால் அவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் ஆயுள் தண்டனையும், 20 வருட கடுழிய சிறைதண்டனை வழங்கியது. இந்த நிலையில் இவர் மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்துள்ளார்.

எனவே தனக்கு தேவையான சாட்சிகள், ஆதாரங்கள் என்பவற்றை திரட்டுவதற்காக தனக்கு பிணை வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள அவர்,

இது தொடர்பில் நீதி அமைச்சின் அதிகாரி களை சந்திக்க வேண்டுமென மூன்றுக்கு மேற்பட்ட முறை கடிதங்களை சிறைச் சாலை அதிகாரிகளூடாக வழங்கியிருக் கிறார்.

இருப்பினும் அவர் கொடுத்த கடிதங் களை மேல் அதிகாரிகளுக்கு வழங்க முடி யாது என புதிய மகசீன் சிறைச்சாலையின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளதாக உறவி னர்களிடம் குறித்த கைதி தெரிவித்துள்ளார்

பிணை வழங்கக்கோரி கடந்த ஞாயிற்றுக் கிழமை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். ஆனால் குறித்த நபர் அன்றில் இருந்து எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத தண்டனை சிறையில் தனியாக அடைக்கப்பட்டுள்ளார். உடல் நிலை மிக மோசமடைந்துள்ள குறித்த அரசியல் கைதி பிணை கோரி 4 ஆவது நாளாகவும் தனது போராட்டத்தை தொடர்வதாக அறிவித்துள் ளார். நேற்று குறித்த நபரை பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் சென்று பார்வையிட்டிருந்தார். (ம-9)

நந்திக் கொடிகள்...

எறியப்பட்டுள்ளன. அத்தோடு அந்த நந்திக் கொடிகளை கட்டியிருந்த கம்பங்கள் பிடுங்கி ஓரிடத்தில் அடுக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் நேற்று முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நீரா வியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாக செய லாளர் சி.ராஜா, எமது நீராவியடி பிள்ளை யார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் பௌத்த பிக்கு ஒருவர் அடாத்தாக குரு கந்த ரஜமகா விகாரை என்னும் பெயரில் விகாரை அமைத்து பிரம்மாண்ட புத்தர் சிலை ஒன்றை யும் அமைத்துள்ளார். இந்த நிலையில் இந்த சர்ச்சைக்குரிய விவகாரம் தொடர்பாக கடந்த மாதங்களில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன் றில் விசாரணைகள் இடம்பெற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பில் இரண்டு தரப்பினரும் அமைதியான முறையில் தமது ஆலயங் களில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் பௌத்த பிக்கு சார்பில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள் ளது. இந்த வழக்கு மீதான விசாரணை கடந்த சில நாட்களுக்கு முன்னர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் மேல்நீதிமன்றின் வழக்கு விசாரணையின் போது குறித்த எமது பிள்ளையார் ஆலய பகுதியில் ஆலய நிர்வாகத்தினரோ பௌத்த பிக்குவோ எவ்வாறான அபிவிருத்தி வேலைகளையும் செய்ய முடியாது எனவும் ஏற்கெனவே அங்கே இருக்கின்ற அமைப்புகள் அப்படியே இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் விதமாக பௌத்த பிக்கு எமது ஆலயத்தில் கட்டப்பட்டிருந்த அந்த நந்திக் கொடிகளை மிகவும் கீழ்த்தரமான முறை யில் அடாத்தாக அறுத்து வீதியோரத்தில் எறிந் திருக்கின்றார். அத்தோடு 24 மணித்தியால மும் இந்த விகாரை அமைந்துள்ள பிரதேசத் தில் பொலிஸார் கடமையில் இருக்கின்றார் கள். ஆலயம் இருக்கின்ற இடத்திற்கு எதிர்ப் பக்கமாக மிகவும் குறுகிய தூரத்தில் இரா ணுவக் காவலரண் ஒன்றை அமைத்து 24 மணி நேரமும் இராணுவத்தினர் கடமை யில் இருக்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் எல்லோரும் கடமையில் இருக்கின்றபோது இந்த நந்தி கொடிகள் அறுத்து எறியப் பட்டுள்ளது.

அடாத்தாக எமது ஆலய பகுதியில் வந்து தங்கியிருந்து விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்கு மேலும் மேலும் நீதிமன்றத் தின் தீர்ப்புகளை அவமதிக்கும் விதமாக நடந்து கொண்டிருக்கின்றதை பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் செயற்பாடாகவே இந்த நந்திக்கொடிகள் அறுத்து எறியப்பட்டுள்ள சம்பவத்தை நாம் பார்க்கின்றோம் என தெரிவித்தார். (ம-281)

5ஜி ஸ்மாட்...

கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

5ஜி ஸ்மாட் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் பொதுமக்களுக்குச் சரியான அறி வுறுத்தல்கள் இல்லாமல் நடைபெறுகி றது. எல்லாத் தொலைத்தொடர்பு கோபுரங்களும் கதிர்வீச்சை வெளிப்படுத்துவது உண்மை. அவற்றில் 5ஜி ஸ்மாட் கோபுரங்களின் கதிர் வீச்சு ஆபத்தானது.

இந்த 5ஜி சிமார்ட் கோபுரங்கள் ஏனைய தொலைத்தொடர்பு கோபுரங்களைவிட ஆபத்தானது என்பதற்கு ,ரண்டு காரணங்கள் உண்டு.

1. 5ஜி அதியுயர் கதிர்வலைகளைக் கொண்டது.
2. 5ஜி அதிர்வலைகள் குறுகிய அலைநீளம் கொண்டவை.

இதனை ஈடு செய்வதற்கு அதிகளவான சிறிய கோபுரங்களை நிறுவ வேண்டும். இதனுடைய கதிர்வலைகள் அதிகரிக்க அதிகரிக்க மனித இனம் உட்பட சகல உயிரி னங்களுக்கும் அவை ஆபத்தானவையாக அமையும். மற்றைய தொலைத்தொடர்பு கோபுரங்களைவிட 5ஜி சிமார்ட் தொலைத் தொடர்புக் கோபுரங்கள் ஆபத்தானவை.

ஆகவே 5ஜி சிமார்ட் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைக்கும் பணிகளை பிற்போட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

3 ஆண்டுகளில்...

ருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கல்முனை தமிழ் பிரதேச செயலக விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்துவது ஆரோக்கிய மானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் மற்றும் கல்முனை விவ காரம் குறித்து வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை நான் தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன்.

04

வீடு வாடகைக்கு

பருத்தித்துறை 2ஆம் குறுக்கு வீதியில் H.N.B வங்கியின் பின்னால் அமைந்துள்ள மேல் மாடியுடன் கூடிய "ராஜகிரி" என்னும் பெயருடைய வீடு வாடகைக்கு உண்டு. கம்பனிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 662 6550 (C-7018)

பாராளுமன்றில் ரணில் வெற்றி பெற்றாலும் மக்கள் மத்தியில் தோல்வியை சந்திப்பார்

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெற்றாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்களிடம் வெற்றியை பெற்றுக் கொள்ளும் எந்த வாய்ப்பும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை காப்பற்றுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தது.

எனினும் கீழ் மட்டத்தில் உள்ள இந்து மக்கள் தற்போதைய அரசாங்கத்தை முழுமையாக எதிர்க்கின்றனர்.

அத்துரலியே ரத்ன தேரர்

அவர்கள் அரசாங்கத்தை மாற்ற தயாராகி இருக்கின்றனர்.

சம்பிரதாய அரசியலை முடிவுக்கு கொண்டு வந்து, சிங்கள, தமிழ் மக்கள் ஆழமான பிணைப்புடன் பயணித்து வருகின்றனர். பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றாலும் நாட்டின் மக்கள் மத்தியில் அவர் தோல்வியடைந்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெற முடிந்தால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு பிரதமருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

அப்போது, ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல, பிரதமராக பதவிக்கு வர எதிர்பார்த்துள்ள சகல சக்திகளும் தோல்வியடையும் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால பயிற்சியுடன் வேலை வாய்ப்புக்கள் உண்டு.
- பயிற்சிக்கான வகுப்பு தொகை -7'500/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- சம்பளம் -15'000/- (C-7018)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

விற்பனைக்கு

கல்லுண்டாய் வைரவர் கோயிலுக்கு வடக்கு பக்கமாக 3 1/2 பரப்பு மேட்டு நிலக் காணி உறுதியுடன் விற்பனைக்கு உண்டு.

T.P : 077 971 4755 (9615)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்கட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240 V2 TRAVELS (C-6918)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9402)

Techno World

தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி லிங்கன் கூல்பார் அருகாமை – யாழ்ப்பாணம்)

A/L 2019 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

விசேட செயலமர்வு

ஆரம்பம் :- 19, 20, 21.07.2019
காலை – 8.30 மணிமுதல் மாலை – 2.00 மணி வரை

ICT : உமாகாந்தன், லவன்
விவசாயம் : ஜெயந்தன், சாரங்கன், நிரோஜன்
புவியியல் : S.P. கரன்
சித்திரம் : ஜெயந்தன்

அனைத்து பிரிவு மாணவர்களும் பங்கு பற்றலாம்
தொடர்புகளுக்கு : 077 017 5346 / 077 170 3549 (C-7020)

மூன்று மாத வார, வார இறுதி

இலவச ஆங்கிலம்

தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள்
13 வயதிற்குமேற்பட்ட எவரும் இணையமுடியும்

சர்வதேச அங்கீகாரத்துடனான பின்லாந்து நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழுடனான 3 மாத ஆங்கிலக்கற்கைநெறி!

சனி ஞாயிறு பிரிவுகள் 20.07.2019
1.காலை 10.00 2.காலை 11.00 3.பி.ப 02.00

செவ் & வியாழன் பிரிவுகள்
1.காலை 08.030 2.காலை 10.30

திரு.ஷாம்சன் அவர்களின் நேரடி வகுப்பு!

Modules கட்டணமாக ரூ 1000 மட்டும் செலுத்துதல் வேண்டும்

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இணையமுடியும்

SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்
077 621 4567 021 222 4282 (C-6994)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

இழப்பீடு வழங்கும் பணி துரிதப்படுத்தப்படும் - அரசு

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கும் பணி துரிதப்படுத்தப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடந்த பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடாக மொத்தம் 262 மில்லியன் ரூபாய் இதுவரை செலுத்தப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பிரதமர் நேற்று புதன் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 201 பேரின் உறவினர்களுக்கு இழப்பீடாக 198 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாக்குதல்களால் காயமடைந்த 438 பேருக்கு இழப்பீடாக மொத்தம் 64 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மேலும் பல நிறுவங்களின் ஆதரவுடன் சேதங்களின் மதிப்பீட்டுப் பணி தொடர்கிறது என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். (ம-3)

துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-6868)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (9612)

கூட்டமைப்பாலேயே அரசு இயங்குகின்றது - வியாழேந்திரன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்திபாரத்திலேயே இன்று அரசாங்கம் இயங்குகின்றது. எனவே இதனைப் பயன்படுத்திக் கொண்டு கூட்டமைப்பு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உள்ளிட்ட விடயங்களில் சாதகமான தீர்வொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

வெலிக்கட சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவரை நேற்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

A/L 2019 பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்குமான

மாபெரும் விசேட செயலமர்வு

காலம் : ஜூலை 19 , 20, 21

ICT , விவசாய விஞ்ஞானம்

புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி

மாதிரி வினாத்தாள்களும், கையேடுகளும் வழங்கப்படும்.

Wisdom Technical College - விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 (C-7019)

வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பொதி சுமப்பவர்கள் தேவை (நிரந்தர வேலை ஆட்கள்) நேரில் சமுகம் தரவும்.

தேனுகளஞ்சியம்
(நெஸ்லே விநியோகத்தர்)
இல. 54/2, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P : 021 492 1258, 077 045 6146 (9624)

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்ச்

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 27.07.2019 சனி காலை 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 29.07.19 3.30 pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள். (C-6927)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.